Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலவைகளைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
C-1129

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 29 புதன்கிழமை (13.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 025

## கன மழையால் 1047 பேர் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு நாட்களாக யாழ் மாவட்டத்தில் காணப் பட்ட மழையுடன் கூடிய காலநிலை 19

# வடக்கில் கொட்டித் தீர்த்த கன மழை

- வெள்ளத்தால் பல குடும்பங்கள் பாதிப்பு
- இரணைமடுவின் 14 வான் கதவுகளும் திறப்பு
- கிளிநொச்சியில் குளங்கள் வான் பாய்கின்றன



(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த இரண்டு நாட் களாக பெய்த கனமழையால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள் ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து நீர்ப்பாசன குளங் களும் வான் பாயத் தொடங்கி யுள்ளன.

இரணைமடுக் குளத்தின் 14 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. 19

## கொரோனா தொற்று அதிகரிப்பையடுத்து

# இரண்டு வாரங்களுக்கு வவுனியா நகர் முடக்கம்

## வவுனியா பாடசாலைகளும் மூடப்படுகின்றது

(வவுனியா)

கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலை யில் வவுனியா நகரப் பகுதி இரண்டு வாரங் களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட நகர கோட்ட பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் அறி வித்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா மாவட்டத்தில் கோவிட்-19 அவசர காலநிலைமை கள் தொடர்பில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்றைய தினம் விசேட கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் 19 கிராம சேவ கர் பிரிவுகளில் 19

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருட கடூழிய சிறை



03ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை யுடனான வானிலை மேலும் தொடரும் 19



## முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பு அரசாங்கத்தின் தீர்மானம் அல்ல

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நினைவுச் சின்னத்தை தகர்க்கும் தீர் மானத்தில் அரசாங்கத்துக்கு தொடர் பில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரி வித்துள்ளார்.

இந்த விடயத்தில் அரசாங்கம் கொள்கை முடிவு எத னையும எடுக்கவில்லை 19

## சுகாதார பரிசோதகர் என பாசாங்கு செய்து

### தாலிக்கொடி, சங்கிலி அறுப்பு

### தொண்டைமானாறில் சம்பவம்

03ஆம் பக்கம் பார்க்க

## பிள்ளைக்கு கொரோனா என அறிந்து

# விபரீத முடிவெடுத்த தாய் உயிரிழப்பு

### பருத்தித்துறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்துறையில் கொரோனா தொற்றுக் குள்ளான ஆசிரியரின் 19

## முள்ளிவாய்க்கால் தூபி தகர்க்கப்பட்டமையை கண்டித்து ஐ.நா முன்றலில் போராட்டம்

(ஜெனிவா)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் தூபி தகர்கப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் வாழும் 19




## மிளகாய்த்தூள் வீசி விட்டு

# விவசாய மருந்து கடை உடைத்து கொள்ளை

### முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

மிளகாய்த்தூள் வீசிவிட்டு விவசாய மருந்து கடை உடைத்து 19

## கொரோனாவால் மேலும் 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் 19

## 9 வடக்கில் நேற்றும் பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப் பாணம் பல்கலைக்கழக மருத் துவபீட ஆய்வுகூடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமை 679 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக வும், அவர்களில் வட 19

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 24.02.2021 மற்றும் 25.02.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 24.02.2021 மற்றும் 25.02.2021ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. பண்பாட்டுக் கற்கையில் முதுகலைமாணி - 2020
4. சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணி - 2017
5. கல்வியியலில் முதுமாணி
6. முது வியாபார நிர்வாகமாணி
7. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (முழுநேரம்) - 2017
8. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (முழுநேரம்) - 2018
9. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (பகுதிநேரம்) -2019 - வவுனியா வளாகம்
10. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2020
11. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2020
12. மருத்துவ விஞ்ஞானமாணி - 2012
13. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2017
14. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2018
15. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017
16. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
17. மருந்தகவியல்மாணி (சிறப்பு) - 2017
18. மருந்தகவியல்மாணி (சிறப்பு) - 2018
19. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017
20. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
21. விஞ்ஞானமாணி (சிறப்பு) -2017
22. விஞ்ஞானமாணி (பொது) - 2017
23. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி -2017
24. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி -2018
25. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி -2017
26. கலைமாணி (சிறப்பு) - 2017
27. கலைமாணி (சிறப்பு) - 2018
28. கலைமாணி (பொது) - 2017
29. கலைமாணி (பொது) - 2018
30. நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்) - 2017
31. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) - 2017
32. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) - 2017
33. சட்டமாணி - 2018
34. வியாபார நிர்வாகமாணி - 2017
35. வியாபார நிர்வாகமாணி (பொது) - 2017
36. வணிகமாணி - 2017
37. வணிகமாணி - 2018
38. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
39. பொறியியல் விஞ்ஞானமாணி - 2018
40. பொறியியல் விஞ்ஞானமாணி - 2019
41. பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2017

## வவுனியா வளாகம்

42. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமாணி (பொது)
43. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
44. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
45. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது)
46. விஞ்ஞானமாணி (பிரயோககணிதமும் கணிப்பிடலும்)- (பொது)
47. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
48. வியாபார முகாமைத்துவமாணி (பொது)
49. வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு)
50. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி

## அறிவுறுத்தல்கள்

**1. வேண்டுகோள் படிவங்கள்:**

விண்ணப்பதாரிகள் வேண்டுகோள் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**2. கட்டணங்கள்**

**இளமாணிப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்பு விழாக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 750.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 700.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா. 600.00 |
| **மொத்தம் 2800.00** | |

**பட்டப்பின் படிப்புப் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| பட்டமளிப்பு விழாக் கட்டணம் | ரூபா. 2000.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. 1000.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. 1000.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா. 600.00 |
| **மொத்தம் 4600.00** | |

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச்சான்றிதழைப் பெறவிரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப் படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடவும்.

**கீழே தரப்பட்ட பொருத்தமான குறிப்பிலக்கத்தையே குறிப்பிடுக.**

➢ **இளமாணிப் பட்டதாரிகள்**
நேரில் சமுகமளிப்போர் - 970000052100308
சமுகமளிக்காதோர் - 970000052100340

➢ **பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள்**
நேரில் சமுகமளிப்போர் - 970000082100310
சமுகமளிக்காதோர் - 970000082100351

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச்சீட்டில் குறிப்பிடவும். மேற்குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும் நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கான ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையில் வழங்கப்படும்.

5. பல்கலைக்கழக நிலுவைகள் பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப்பிரதி மற்றும் பட்டச் சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்காணும் முகவரிகளில் பட்டத்திற்கு தொடர்பான முகவரிக்கு 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். ( கடித உறையின் இடதுபக்க மூலையில் **"35ஆவது பட்டமளிப்பு விழா வேண்டுகோள் படிவம்"** எனக் குறிப்பிடவும்.)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்:**
**உதவிப்பதிவாளர் / அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்:**
**பிரதிப் பதிவாளர் / பரீட்சைகள் கிளை,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

கடவுச்சீட்டு அளவு (35mmX45mm) உடைய வெற்றுப் பின்புலத்துடனான புகைப்படம் ஒன்றினை வேண்டுகோள் படிவத்துடன் இணைத்து அனுப்புவதுடன் அதனது மென்பிரதியை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு பல் கலைக்கழக மாணவர் பதிவிலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளர் / அனுமதிகள் கிளையின் தொலைபேசி இலக்கம் **021 222 6714** அல்லது **ar.admissions@yahoo.com** எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும். முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.


**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 29.01.2021**

**பதிவாளர்**

# நினைவுத் தூபியை இடித்தது சரியே முழக்கமிடுகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

**யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட தூபியை மாத்திரமல்லாது விடுதலைப் புலிகளை நினைவுகூரும் தூபிகள் வடக்கில் எங்கெல்லாம் இருக்கின்றதோ அவற்றை முழுமையாக இடித்தழிக்க வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**



அத்துடன், விடுதலைப் புலிகளை நினைவுத் தூபிகள் அமைத்தோ அல்லது பகிரங்க நிகழ்வுகள் நடத்தியோ நினைவுகூரல் நடத்துவது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெரும் குற்றமாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியைத் துணைவேந்தர் இடித்து அகற்றியுள்ளார். இது அவரின் தற்றுணிவை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப்போரில் மரணித்த பொதுமக்களை நினைவேந்தும் தூபி என்ற பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்தது புலிகளை நினைவேந்தும் தூபியே.

இதைப் பல்கலைக்கழகத்தில் வைத்திருப்பது சட்ட விரோதமானது. அதற்கமைய நல்லதொரு தீர்மானம் எடுத்து அந்தத் தூபியைத் துணைவேந்தர் இடித்துள்ளார்.

மூவின மாணவர்களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்திருப்பாரென நான் நினைக்கின்றேன். எனவே, மாணவர்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாமல் கல்வியைத் தொடர வேண்டும்" என விமல் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## ரஞ்சன் ராமநாயக்கவிற்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு 4 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய விசேட அமர்வில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து, அவருக்கு 4 வருட கடூழிய சிறை த்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற கலைப்பு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்த, நீதிபதிகள் குழுவின் அமர்வு தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதாக தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## கொரோனா தடுப்பூசி நிலையங்களை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை 4000 இலிருந்து 5000 வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி நேற்று முன்தினம் மாலை கூடி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

ஊசி ஏற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல், தடுப்பூசியை பெற்றுக் கொள்வோரை பதிவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோய்த்தடுப்பு, கொவிட்-19 கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர், வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாவை கட்டுப்படுத்தக்கூடிய ஏதேனும் ஒரு வகை அல்லது சில தடுப்பூசி வகைகளை விரைவில் நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். (நி-4)

## 165 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

உக்ரேயன் நாட்டிலிருந்து மேலும் 165 சுற்றுலாப் பயணிகள் நேற்று செவ்வாய்க் கிழமை நாட்டை வந்தடைந்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டிற்குள் அழைத்து வரப்பட்டனர் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 180 சுற்றுலாப்பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேய்னிய பயணிகள் விமானம் டிசெம்பர் 28ஆம் திகதி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அவர்களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



**கிளிநொச்சி இரணைமடுக்குளத்திற்கான நீர் வருகை தொடர்வதால் குளத்தின் 14 வான் கதவுகள் தொடர்ந்தும் திறந்து விடப்பட்டுள்ளன.**

**(படம்- சப்தசங்கரி)**

## சுகாதார பரிசோதகர் எனக்கூறி தாலிக்கொடி, சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர் எனக்கூறி பெண்ணொருவரின் தாலிக்கொடி மற்றும் சங்கிலி அறுத்த பெண்ணொருவரை அப்பகுதி இளைஞர்கள் மடக்கிப் பிடித்து வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த பெண் நேற்றுக் காலை தொண்டைமானாறு அரசடி பகுதியில் உள்ள ஊர்களுக்குச் சென்று தான் பொதுச்சுகாதார பரிசோதகர் என்று கூறி கொரோனாத் தொற்று தொடர்பான பரிசோதனைகள் செய்ய வந்ததாகவும், முகக் கவசம் அணிவது தொடர்பாகவும் கேட்டு அனைவரின் வீடுகளிலும் சென்று பார்வையிட்டுள்ளார்.

அதன்போது வீட்டிற்கு சென்ற பெண் அங்கிருந்த பெண்ணொருவர் அணிந்திருந்த தாலிக்கொடி மற்றும் சங்கிலியை திருடிச் சென்றுள்ளார்.

அந்தப் பெண் கூச்சலிட்ட போது, நகைகளைத் திருடிய பெண் தனது மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றபோது, அப்பகுதி இளைஞர்கள் துரத்திச் சென்று, மடக்கிப் பிடித்துள்ளனர்.


இளைஞர்களால் பிடிக்கப்பட்ட அந்தப்பெண் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-101)

# பிபா நடுவராக

## கல்முனையை சேர்ந்த ஜப்ரான் தெரிவு

**சர்வதேச கால்பந்தாட்ட கழகங்களின் சம்மேளனத்தின் பிபா நடுவராக கல் முனையைச் சேர்ந்த ஜப்ரான் தெரிவு செய் யப்பட்டுள்ளார்.**




சர்வதேச கால்பந்தாட்ட கழகங்களின் சம்மேளனத் தினால் -பிபா ஒவ்வொரு வருடமும் நடுவருக்கான தெரிவு இடம்பெறும்.

இதற்கமைய 2021 ஆண்டுக்கான சர்வதேச நடுவர்களுக்கான **(FIFA International Referees)** பெயர் பட்டியலில் இலங்கை யிலிருந்து ஆதம்பாவா முஹம்மட் ஜப்ரான் உட்பட ஆறு பேர் பிரதான நடுவ ராக தெரிவு செய்யப்பட்ட னர்.

கல்முனையைச் சேர்ந்த ஆதம்பாவா முஹம்மட் ஜப்ரான் சர்வதேச நடுவராக தெரிவு செய்யப்பட்டிருப் பதன் மூலம் நாட்டிற்கும் அம்பாறை மாவட்டத் திற்கும் பெருமை சேர்த் துள்ளார்.

சிறு வயது முதல் கால்பந் தாட்ட துறையில் ஆர்வம் கொண்ட இவர் தாம் இத் துறையில் நடுவராக வர வேண்டுமென விரும்பிய தாகவும் அயராத கடின முயற்சி மூலம் தாம் இவ் இலக்கை அடைந்ததா கவும் தெரிவித்தார்.

கடுமையான முயற்சி யுடன் இந்த இலக்கை அடைந் ததாக நெகிழ்ச்சியுடன் ஜப் ரான் தெரிவித்தார். தனது 26வயதில் சர்வதேச நடு வராக தெரிவு பெற்றது என் பது கால்பந்தாட்ட துறை யில் முயற்சி செய்தால் சாதிக்க முடியும் என்பதற்கு இவர் இளைஞர்கள் மத் தியில் முன்னுதாரணமா கும்.

வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் இருந்து முதன் முறையாக பிபா நடுவராக இவர் தெரிவு செய்யப்பட் டமை இங்கு குறிப்பிடத் தக்கது. (4)

# இலங்கை கிரிக்கெட்டின் உடற் பயிற்சி செயற்றிறன் மேலாளராக கிராண்ட் லூடென்



தென்னாபிரிக்காவின் கிரா ண்ட் லூடனை இலங்கை கிரிக்கெட்டின் பயிற்சிப் பிரிவின் உடற் பயிற்சி செயற்றிறன் மேலாளராக இலங்கை கிரிக் கெட் நிர்வாகம் நியமித்துள் ளது. இந்த நியமனமானது நேற்று முன்தினம் முதல் அமு லுக்கு வந்துள்ளது.

இந்த நியமனத்துக்கு அமைவாக இலங்கை கிரிக் கெட்டின் கீழ் உள்ள அனை த்து அணிகளின் உடற் பயிற்சி செயற்றிறன் மேற்பார்வை யிடும் அதேநேரத்தில் தேசிய அளவிலான விளையாட்டு வீரர்களின் பலத்தை வளர்ப்ப தில் லூடென் கவனம் செலுத்து வார்.

இலங்கை கிரிக்கெட் நிர்வா கத்துடனான ஒப்பந்தம் கையெ முத்திடுவதற்கு முன்பு, லூடென் 2014 முதல் 2019 வரை பாகி ஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் பணியாற் றியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் பாகி ஸ்தான் கிரிக்கெட் அணி சம் பியன்ஸ் டிராபியை வென்ற போது, அணியின் களத்தடு ப்பை மேம்படுத்துவதில் லூடென் முக்கிய பங்கு வகித்தார்.

விளையாட்டு மற்றும் உடற் பயிற்சி தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்ற லூடென் தென் னாபிரிக்க கிரிக்கெட் நிறு வனத்தில் மூன்றாம் நிலை கிரிக்கெட் பயிற்சியில் சான் றிதழையும் பெற்றுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் உயர் செயற்றிறன் மையத்திற்கு லூடென் சேவை குறித்து கரு த்து தெரிவித்த இலங்கை கிரிக் கெட் தலைமை நிர்வாக அதி காரி ஆஷ்லே டி சில்வா,

எங்கள் கிரிக்கெட் முறைக்கு லூடனை நாங்கள் வரவேற் கிறோம். அவரது வருகை தேசிய அணியின் பலம், தரம் மற்றும் வளர்ந்து வரும் வீரர் களுக்கு மேலும் வலுச் சேர் க்கும் என்று நாங்கள் நம்புவ தாக தெரிவித்துள்ளார். (4)

# தந்தையானார் விராட்



இந்திய கிரிக்கெட் அணி யின் கப்டன் விராட் ஹோலி- பாலிவுட் நடிகை அனுஷ்கா ஷர்மாவுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி கப்டன் விராட் ஹோலி, பாலி வுட் நடிகை அனுஷ்கா சர் மாவை திருமணம் செய்து கொண்டார்.

அனுஷ்கா ஷர்மா கர்ப்பமாக இருக்கும் செய்தியை விராட் ஹோலி ஐ.பி.எல்.போட்டிக்காக போய் சென்றிருந்த போது தெரிவித்திருந்தார்.

அவுஸ்திரேலியா தொடருக் கான இந்திய அணியில் இடம் பிடித்திருந்தார். அனுஷ்கா ஷர்மாவுக்கு குழந்தை பிறக்க இருப்பதால் முதல் டெஸ்ட் முடிந்தபின், இந்தியா திரும் பினார்.

இந்நிலையில் விராட் ஹோலி- அனுஷ்கா ஷர்மா தம் பதியருக்கு நேற்று பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்த தகவலை விராட் ஹோலி டுவிட் டரில் தெரிவித்துள்ளார். (4)

# இந்தியா- ஆஸி இறுதி டெஸ்ட்; முக்கிய வீரர்கள் விலகல்




காயம் காரணமாக அவுஸ்தி ரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இருந்து இந்திய வீரர்கள் ஹனுமா விஹாரி மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகியோர் விலகியுள்ள னர்.

இந்திய அணி அவுஸ்திரே லியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்நாட்டு அணி யுடன் விளையாடி வருகிறது.

இந்நிலையில், 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய வீரர்கள் ஹனுமா விஹாரி மற்றும் ஜஸ்பிரித் பும்ரா ஆகி யோரும் விலகியுள்ளனர்.

நேற்று முன்தினம் பட்டிங் செய்த போது விஹாரிக்கு காயம் ஏற்பட்டது. அதேபோல் பீல்டிங்கின் போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா வுக்கும் காயம் ஏற்பட்டது.

இதையடுத்து, ஹனுமா விஹாரி மற்றும் பும்ரா ஆகிய இரு வீரர்களும் பிரிஸ்பேனில் நடைபெற உள்ள 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளனர். பும்ரா விலகி யுள்ளதால் அவருக்கு பதிலாக டி நடராஜன் களமிங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# ஜடேஜாவுக்கு அறுவை சிகிச்சை


அவுஸ்திரேலிய அணிக்கெ திரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது காயமடை ந்த இந்தியக் கிரிக்கெட் அணி யின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு சிட்னியில் அறுவை சிகிச்சை மேற்கொள் ளப்பட்டுள்ளது.

மூன்றாவது டெஸ்ட் போட் டியின் போது, பெட் கம்மின்ஸ் வீசிய பந்து ஜடேஜாவின் இடது கை பெருவிரலைப் பதம் பார்த் தது. இதன் நிலைமை மோச மடைந்ததால், அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

இத்தகவலை டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜடேஜா, 'அறுவை சிகிச்சையால் சிறிது நாளைக்கு விளையாட முடியாது.

மீண்டும் பழைய உற்சா கத்துடன் திரும்பி வருவேன்' என குறிப்பிட்டுள்ளார். (4)

# சுகாதார விதிமுறைகள் மீறியோர் கைது



(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியைப் பேணாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டனர். (நி-4)

# மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது

## உதய கம்மன்பில



(கொழும்பு)

**நாட்டில் கொரோனாத் தொற்றின் நிலை சுமுகமாகும் வரையில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், சுகாதார நிலையை கருத்திற்கொண்டு தேர்தலை நடத்த ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

மீண்டும் நாடு வழமைக்கு திரும்பும்போது மாகாண சபைத் தேர்தல் குறித்து மீளாய்வு செய்து அரசாங்கம் முடிவை அறிவிக்கும் என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தலை இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு பழைய தேர்தல் முறையின் அடிப்படையில் நடத்தப்படும் என கடந்த மாதம் அரசாங்கம் அறிவித்திருந்தது.

மாகாண சபைகளும், உள்ளூராட்சி அமைச்சருமான ஜனக பண்டார தென்னக்கோன் பழைய முறைப்படி மாகாண சபை தேர்தலை நடத்துவது தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதேவேளை விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தல் விடுத்திருந்தார்.

இந்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட விதிகள் குறித்து ஆராயும் பணிகளை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தொடங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வழக்கு தள்ளுபடி

(கொழும்பு)

பி.பி.சி.உலக சேவையின் சந்தேஷயவிற்கு எதிராக, வர்த்தகர் திலித் ஜயவீர தாக்கல் செய்திருந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் செலவு நிபந்தனைகளுக்கு அமைவாக நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது. (நி-4)

## அதி சொகுசு பேருந்து கொள்வனவு செய்ய அனுமதி

(கொழும்பு)

பொதுமக்கள் அனைவரும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவும் பிரதான நகரங்களில் உள்ள வாகன நெரிசலை கட்டுப்படுத்தவும் வினைத்திறனான 200 அதி சொகுசு பேருந்துகளை உள்ளூர் கம்பனிகள் ஊடாக விலைமனுக்கோரல் அடிப்படையில் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி-4)

# 700 போதை வில்லைகளுடன் ஒருவர் கைது

(களுத்துறை)

களுத்துறை - மத்துகம பகுதியில் 700 போதை வில்லைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யடதொல பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 100 போதை வில்லைகளை கைப்பற்றியுள்ள குற்றப்புலனாய்வு பிரிவினர், அவரிடம் தொடர்ச்சியாக மேற்கொண்ட விசாரணைக்கமைய களுத்துறை - ரஜவத்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 600 போதை வில்லைகளை மீட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினர் சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## பிக்குகளுக்கு கௌரவப்பட்டம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள நான்கு பௌத்த பிக்குகளுக்கு "ஆஹா மகா பண்டித" (Agga Maha Pandita) என்னும் கௌரவ மத பட்டத்தை வழங்க மியன்மார் ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது புகழ்பெற்ற தேரவாத பௌத்த பிக்குகளுக்கு மியன்மார் அரசாங்கத்தால் வழங்கப்படும்ஒரு மரியாதைக்குரிய கௌரவப்பட்டமாகும். மியன்மார் நாட்டின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கௌரவப்பட்டங்களை வழங்க மியன்மார் ஜனாதிபதி யு வின் மைன்ட் முடிவு செய்துள்ளார். (நி-4)

# செல்வாக்குடைய கடவுச்சீட்டு இலங்கைக்கு 100 ஆவது இடம்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டின் உலகின் அதிக செல்வாக்குடைய கடவுச்சீட்டுக்களின் பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கையின் கடவுச் சீட்டானது 100 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையின் கடவுச்சீட்டை பயன்படுத்தி 42 நாடுகளுக்கு விசா இல்லாது பயணிக்க முடியும்.

இந்தியாவின் கடவுச்சீட்டு 85 ஆவது இடத்திலும் பாகிஸ்தானின் கடவுச்சீட்டு 107 ஆவது இடத்திலும் உள்ளது.

இப்பட்டியலில் ஜப்பான் நாட்டின் கடவுச்சீட்டு முதலிடம் பிடித்துள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டை பயன்படுத்தி 191 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.




இப்பட்டியலில் ஜப்பான் தொடர்ச்சியாக முதலாம் இடத்தை பிடித்துள்ளமை இது மூன்றாவது சந்தர்ப்பமாகும்.

இரண்டாவது இடத்தை சிங்கப்பூரும் (190), மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை (189) ஜேர்மன் மற்றும் தென்கொரிய நாடுகளும் பிடித்துள்ளன. (நி-4)

# தனிப்பட்ட தகவல்கள் முகநூலுக்கு பகிரப்படாது 'வட்ஸ் அப்' நிறுவனம் விளக்கம்



(கொழும்பு)

தனிநபரின் விபரங்கள், இருப்பிடம் உள்ளிட்ட தகவல்கள் முகநூலுக்கு பகிரப்படாது என வட்ஸ்அப் நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

பேஸ்புக்கிற்கு சொந்தமான பரிமாற்ற செயலியான வட்ஸ்அப் பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வட்ஸ்அப் அதனுடைய தனிப்பட்ட கொள்கைகளையும் பயன்பாட்டு விதிகளையும் மாற்றியமைப்பதாக அறிவித்தது.

ஒருமுறை மட்டும் இப்படி தனியுரிமை கொள்கைகள் மாற்றப்படுகிறது என்று பயனாளர்களுக்கு தகவல் வந்தது.

மேலும்தனிப்பட்ட கொள்கை புதிப்பிப்பு செய்யவில்லை என்றால் அடுத்த மாதம் முதல் வட்ஸ்அப் ஐ பயன்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் வட்ஸ்அப் பயனாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக விளக்கமளித்துள்ள வட்ஸ்அப் நிறுவனம், நண்பர்கள், குடும்பத்தினர் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் பேஸ்புக் நிறுவனத்துடன் பகிரப்படாது என்றும் வட்ஸ்அப் குரூப்புகள் தனித்தன்மையுடன் தொடர்ந்து செயற்படும் என்றும் அறிவித்துள்ளது.

பயனாளர்கள் தகவல்களை நீக்கவோ, தரவிறக்கம் செய்து கொள்ளவோ முடியும். பயனாளர்களின் தனிப்பட்ட செய்திகள், அழைப்பு விபரத்தை சேமித்து வைக்க மாட்டோம் என்றும் வட்ஸ்அப் தொடர்பாக பல்வேறு வதந்திகள் பரவி வருவதால் விளக்கமளிக்கிறோம் என்றும் தெரிவித்துள்ளது. (நி-4)

# பொலித்தீன் தடைக்கு மாற்றுத் திட்டம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தடையின் காரணமாக மாற்று வழிமுறைகளை அறிந்து கொள்வதற்கு நனோ தொழில்நுட்பத்தின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது.

குறுகிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தடையை அடுத்து அதற்கு பதிலாக கண்டறியக்கூடிய சுற்றாடலுக்கு பொருத்தமான மாற்று தயாரிப்புக்கள் தொடர்பில் நனோ தொழில்நுட்பம் உதவ வேண்டும் என்று சுற்றாடல் துறை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நனோ தொழில்நுட்ப அதிகாரிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.(நி-4)

# யாழ்.நகரில் 149 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவு

(நல்லூர்)

யாழில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள் ளதாக திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம். 8.30 மணிமுதல் நேற்றுக் காலை 8 மணிவரையான 24 மணித்தியாலத்தில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

யாழ்.நகரப் பகுதியிலேயே அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

காற்றின் வேகம் மணிக்கு 40-50 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும். குறித்த மழையுடன் கூடிய காலநிலை காரணமாக பொதுமக்கள் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதோடு கடல் தொழிலுக்குச் செல்வோர், தாழ்நிலப் பகுதிகளில் உள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறும் தெரிவித்துள்ளார். (5-4-33)



உத்தியோகத்தர்களுக்கான 2021 ஆம் ஆண்டிற்கான தினக்குறிப்பேடுகளை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ப.ஜெயராணி நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை பிரதிபலிக்கும் வகையிலான அட்டைப்படம் தாங்கிய தினக்குறிப்பேடு உத்தியோகத்தர்களுக்கு வழங்கி வைக்கப்படுவது வழமை. (படம்:-விஜயவாசன்)

# பரீட்சைத் திகதி தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைநடைபெறவுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையு டைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அடடைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்." என்னும் முகவரியுடனோ அல்லது 021 221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங் கிணைப் புக் குழுக் கூட்டம் இன்று 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சுகாதாரம், விவசாயம், கல்வி, வீதி அபிவிருத்தி, மின்சாரம், போக்குவரத்து, மீன்பிடி மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகளின் அபிவிருத்தி போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட வுள்ளன என்பதுடன் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப் பட்டவர்கள் கோவிட்-19 சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமுகமளிக்குமாறும் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறியத்தந்துள்ளார். (5)

# குடும்பநல உத்தியோகத்தர்கள் பயிற்சி நெறிக்கு பயிலுநர்கள் ஆட்சேர்த்தல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த குடும்ப நல உத்தியோகத்தரின் பயிற்சி நெறிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு முடிவுத் திகதி 2021 02. 01 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை (www.health.gov.lk) சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பார்வையிட முடியும்.

ஆட்சேர்ப்பிற்காக 2015/2016/2017 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஏதாவது ஒரு துறையில் சித்தியடைந்த இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவர்கள் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

2019.08.30 ஆம் திகதிய 2139 என்னும் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவிப்பின் கீழ் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணையம் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அலுவலக நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை தேவையான ஆவணங்களுடன் செல்வதன் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வெளிக்களப் பயிற்சி ஆறு மாதங்கள் உள்ளடங்கலாக ஒன்றரை வருடப் பயிற்சிநெறி வழங்கப்படும்.

அத்துடன் வடமாகாணத்தில் இம்மருத்துவ சேவை சார்ந்த பதவி நிலைக்கு பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5)

# வளர்ப்பு மாடுகள் திருட்டு வாழ்வாதாரத்தை இழக்கும் மக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மிருசுவில் பகுதியில் அண்மைக்காலமாக வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் மாடுகள் இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மிருசுவில் பகுதியில் இரண்டு வளர்ப்பு மாடுகள் திருட்டுப் போயுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு மிருசுவில்-பழைய வாய்க்கால் பகுதியில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான நிறைமாத மாடு ஒன்று திருட்டுப் போயிருப்பதாக மாட்டு உரிமையாளர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இச் சம்பவம் இடம்பெற சில தினங்களுக்கு முன்னர் அதே பகுதியில் கன்று ஈன்று 25 நாட்களே ஆன பசுமாடு ஒன்றும் திருட்டுப் போயுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் கால்நடைகள் திருட்டுப்போவதால் மிருசுவில் மக்கள் கால்நடைகளை மேய்ச்சலுக்காக கட்டக் கூட அச்சப்படுகின்றனர். அத்துடன் வாழ்வாதார ரீதியாகவும் பின்னடைவை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மற்றும் உரிய தரப்பினர் தகுந்த நடவடிக்கை எடுத்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-30)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் ஊடாக கனடா, லண்டன், அவுஸ்திரேலியா வாழ் உறுப்பினர்களின் பங்களிப்புக்களோடு 250 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

# இணைய வழியில் யோகாசனம்

(யாழ்ப்பாணம்)

யோகா ஆசிரியர் டாக்டர் கௌரி பாலனின் இலவச யோகா பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இணைய வழியில் நடைபெறவுள்ளன.(5)


Meeting ID: 890 3763 2153

Pass code: 112020



தற்போது பெய்து வரும் மழையால் வலிகாமம் தெற்கில் வெள்ளத்தில் மூழ்கிய விவசாய நிலங்கள். (படம்:-ரவிசாந்)

## சிறைச்சாலையில் தொற்று அதிகரிப்பு



(கொழும்பு)

சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று உறுதியான கைதிகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது.

புதிதாக 10 பேர் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# நெல் கொள்வனவு ஆரம்பம்

(கொழும்பு)

**பெரும்போக நெல் கொள்வனவு நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதனடிப்படையில் இதன் ஆரம்பகட்ட நிகழ்வு அம்பாறை, அக்கரைப்பற்று நெல் களஞ்சியப்படுத்தல் சபைத் தொகுதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிலையில் ஒரு கிலோ தரமான நாட்டரிசி நெல்லை 50 ரூபாவிற்கும் நாட்டரிசியில் ஏனையவற்றை 44 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோ தரமான சம்பா அரிசி விலை 52 ரூபாவிற்கும் சம்பா அரிசியின் ஏனையவற்றை 46 ரூபாவிற்கும் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நெல் விலைச்சரிவை கட்டுப்படுத்துகின்ற நோக்கில் நிர்ணய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்ய விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகேவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதிவழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## தனிமைப்படுத்தப்பட்டது கிண்ணியா, மாஞ்சோலை

(திருமலை)

திருகோணமலை - கிண்ணியா, மாஞ்சோலை கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் குறித்த கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தெரிவித்துள்ளார்.

25 இற்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையால் குறித்த கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (நி-4)

# சினிமா துறையினரின் வரிகள் இரத்து

(கொழும்பு)

சினிமாத் துறையினரிடமிருந்து அறவிடப்படும் பொழுது போக்கு வரியை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு இரத்து செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசசேவைகள், மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற அமைப்பின் செயலாளர் ஜெ.ஜெ.ரத்னசிறி, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கபில குணவர்த்தன ஆகியோரினால் நேற்று முன்தினம் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு தமக்கு இரண்டு வருட காலத்துக்கு சலுகைகளை வழங்குமாறு சினிமாத் துறையினரால் அண்மையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே 2022 ஆம் ஆண்டு வரை பொழுது போக்கு வரியை இரத்து செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2023 ஆம் ஆண்டு முதல் சினிமாத் துறையினரிடம் நூற்றுக்கு 7.5 வீதம் வரி அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரையான காலப் பகுதியில் 5 முதல் 25 வீதம் வரை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் பொழுது போக்கு வரி அறவிடப்பட்டு வந்தது.

எனினும் தற்போதைய புதிய தீர்மானத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் ஒரே அளவு வரி அறவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# தனியார் துறையினருக்கு சம்பளம் வழங்குவதில் சலுகை

(கொழும்பு)




தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் இணக்கம் காணப்பட்ட கால எல்லையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

தொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்படவிருந்த சலுகை காலத்தை எதிர்வரும் மார்ச் மாதம் இறுதி வரை நீடிப்பதற்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் தொழிலின்மை காரணமாக ஊழியர்களை வீடுகளில் தங்கவைக்க நேரிட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கான அடிப்படை சம்பளத்தில் 50 வீதம் அல்லது 14,500 ரூபாய் ஆகிய இரண்டில் மிகவும் சாதகமான தொகையை செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

சேவை வழங்குநர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் திறன்விருத்தி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய தனியார் துறையினருக்கு எதிர்வரும் மார்ச் மாதம் வரை குறித்த தொகையைச் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)


மணிவிழா வாழ்த்து



13.01.2021

யா/இளையதம்பி இந்து வித்தியாலய ஆசிரியர்

Congratulations

திருமதி ஞானமலர் சிவராசா

ஈழத்து புண்ணிய பூமியாம்-காரைநகர் ஈன்ற
கல்விக்கடலின் கலங்கரை விளக்கு
வாண்மைத் தொழிலதனில் வணிகத்துறையிலே
வித்தகராய்த் திகழ மாணவரை வழிப்படுத்தி
உற்சாகமாகவே ஆர்வத்துடன் கற்பித்து
அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஆசிரியை
தனது குடும்பத்தாருடன் வளமாக, நலமாக
ஆனந்தமாக வாழ மனமுவந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

(5289)

சேவை விபரம்

1988 - யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை
1993 - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
1995 - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்
1996 - கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
1997-2012 - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் (பகுதித்தலைவர்)
2013 - யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்
2014 - யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி
2018-2021.01.12 - யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

வாழ்த்துவோர்:-
பாடசாலைச் சமூகம்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


# இணைய வசதிகளுடன் புதிய பேருந்து சேவை

(கொழும்பு)

கொழும்பு நகரை அண்மித்ததாக 'பார்க் அன்ட் சிற்றி பஸ்' (PARK AND RIDE CITY BUS) சேவை நாளை மறுதினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையினூடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன் கொட்டாவ, மகும்புர மல்ரிமோடல் போக்குவரத்து நிலையத்தை கேந்திரமாகக் கொண்டு இந்த பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக 64 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் நடைபெறுமென போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

சொந்த வாகனங்களில் வருபவர்கள் தமது வாகனங்களை கொழும்பு எல்லையில் ஒதுக்கப்பட்டுள்ள தரிப்பிடங்களில் நிறுத்திவிட்டு பாதுகாப்பாக குறித்த பேருந்தில் கொழும்பு நகரத்திற்குள் பயணிக்க தமது வேலைகளைச் செய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சேவை, கொழும்பிற்கு நுழையும் ஐந்து பிரவேச வழிகளிலும் ஆரம்பிக்கப்படும் எனவும் ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து சேவை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த பேருந்துகளில் கொரோனா வைரஸை எதிர்க்கும் இரசாயனப் பூச்சு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தப் பேருந்துகளின் மேற்பரப்பில் வைரஸ் தொடர்புக்கு வந்தவுடன் அவை அழிந்துவிடும் எனவும் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதனைவிட, இந்தப் பேருந்துகளுக்கு வைஃபை வசதிகள் மற்றும் ஜி.பி.எஸ். கண்காணிப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கணனியில் அடுத்த பேருந்தின் வருகையை கண்டறிய மொபைல் பயன்பாடு தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் மேலும், பேருந்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாணயத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதற்காக மின்-ரிக்கெட் முறையை அறிமுகப்படுத்தவும் அமைச்சகம் முடிவு செய்திருப்பதாக அவர் கூறியுள்ளார். (நி-4)

# முல்லையில் மேலும் மூவருக்குத் தொற்று தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தலில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்த பெண் வவுனியாவிலுள்ள உறவினர் வீட்டிற்கு சென்று வந்திருந்த நிலையில் வவுனியாவிலுள்ள குறித்த உறவினருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த பெண்ணிற்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது அவருக்கு தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவருடன் தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் குறித்த விற்பனை நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கடையொன்றில் பணியாற்றுகின்ற கடைக்கு வருகைதந்த இரண்டு பெண்களுக்கு நேற்றையதினம் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பெண்களிடம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று முல்லைத்தீவு நகர் பகுதியில் உள்ள கடைகள் அனைத்தும் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

இருப்பினும் அரச, தனியார் நிதி நிறுவனங்கள் மற்றும் அரச திணைக்களங்கள் வழமை போன்று இயங்கின.

குறிப்பாக முல்லைத்தீவு நகரில் காணப்படுகின்ற வர்த்தகர்கள் நிலையங்கள், சந்தை வியாபாரிகள், நிதி நிறுவனங்களின் ஊழியர்கள் என பலரிடம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதல் தொற்று உறுதியான பெண்ணுடன் தொடர்புடைய 30 பேருக்கு மேற்பட்ட வர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் நேற்று தொற்று உறுதியானவர்களோடு தொடர்பைப் பேணியவர்களையும் தனிமைப்படுத்துகின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (5-4-281)



பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இத்தாவில், சோரன்பற்று மற்றும் பளை நகரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழான பழமரக்கன்று விநியோகம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வுகளில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் மாலதி ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்-கிருஷ்ணகுமார்)

# நீர்ப்பாசன காணிகளுக்குச்செல்லும் வீதிகள் புனரமைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தின் நீர்ப்பாசன காணிகளுக்குச் செல்லும் விவசாய வீதிகளை சியாப் வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கும் வேலைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மண்டைக்கல்லாறு திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபாய் செலவில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் இவ்வேலைகளை முன்னெடுத்துள்ளது. இந்நிகழ்வில் சியாப் திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.ஜெகநாதன், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபு மற்றும் பொறியியலாளர்கள், வன்னேரிக் குளம் கமக்கார அமைப்பினர் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னேரிக் குளத்தின் 3ம், 4ம், 6ம், 9ம், 10ஆம் வாய்க்கால்கள் கொங்கிறீற்றினாலும் கிரவலினாலும் புனரமைக்கப்படவுள்ளன. 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக் குளத்தில் முதல் தடவையாக நிரந்தர புனரமைப்புகள் இடம் பெறுகின்றன. (5-4-350)

# தற்போது பெய்துவரும் மழையால் நெல் அறுவடை பெரிதும் பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழான காலபோக நெற் செய்கையின் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது பெய்து வரும் மழையால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள பாரிய நீர்ப்பாசனக் குளமான அக்கராயன் குளத்தின் கீழ் உள்ள 3 ஆயிரத்து 417 ஏக்கர் நிலப் பரப்பில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது நெல் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அக்கராயன் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கை அறுவடை கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போதைய தொடர் மழை காரணமாக அறுவடைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக, அறுவடை செய்யும் நெல்லை உரிய விலைகளில் விற்பனை செய்யவோ அல்லது உலர விட்டு களஞ்சியப்படுத்தவோ முடியாத நிலையில் குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் நெற் பயிரில் ஏற்பட்ட பாரிய நோய்த்தாக்கம் காரணமாக எதிர்பார்த்த விளைச்சல்கள் கிடைக்கவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (5-4-315)

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த வேண்டும்



(கண்டாவளை)

முல்லைத்தீவு நகரில் கட்டாக்காலி நாய்களின் தொகை அதிகரித்துக்காணப்படுகிறது இதனால் விபத்துக்கள் இடம் பெறுவதுடன் நகரத்தில் பல் வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதாகவும் வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக, நகரத்தின் மையப்பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் கட்டாக்காலிகளாக காணப்படுகின்றன. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன் பொது இடங்கள் அசுத்தமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அதிகரித்துக் காணப்படும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)





தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி நேற்று செவ்வாய்க் கிழமை திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன. மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்ப உறவுகள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் இணைந்து விசேட வழிபாடுகளை மேற்கொண்டனர். (படம்: ஜோசப் நயன்)

## இராசிபலன்

13.01.2021
மார்கழி 29, புதன்கிழமை
அமாவாசை முற்பகல் 11.11 மணிவரை
பூராடம் காலை 6.59 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை
சந்திராஷ்டமம்:- மிருகசீரிடம்

வளவன்


மேஷம்
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.


ரிஷபம்
மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மிதுனம்
மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், பக்குவமாக நடந்து பாராட்டு பெறும் நாள், பயணங்களால் பலனுண்டு.


சிம்மம்
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.


கன்னி
வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் பெருகும் நாள்.


துலாம்
வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும்.


விருச்சிகம்
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.


மகரம்
நீண்டநேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பெரியோர்களின் உதவிகளால் சில நன்மைகள் நடைபெறலாம், தேகநலன் சீராகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்
உறவினர் நலன் கருதி சில செலவுகளைச் செய்வீர்கள், சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், பயணத்தால் பலனுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.


மீனம்
அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

தன்னை ஆளத் தெரியாதவன் பிறரை ஆள முடியாது

# புகையிரத சேவைக்கான முன் பதிவுகள் ஆரம்பம்

(கொழும்பு)

**தூரப் பிரதேசங்களுக்கான புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆசன முன் பதிவுகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் தூரப் பிரதேசங்களுக்கான புகையிரதப் பயணங்கள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக புகையிரத சேவை பொது முகாமையாளர் நிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதற்கமைய புகையிரதத்தில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவது, யாசகம் கேட்பது உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்கிஸை முதல் காங்கேசன்துறைக்கான புகையிரத சேவை கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை செல்லும் கடுகதி புகையிரத சேவை, கொழும்பு மற்றும் பதுளைக்கிடையிலாக பொடிமினுக்கிய புகையிரத சேவை, கொழும்பு கோட்டை முதல் கண்டி வரையான புகையிரத சேவை, மாத்தறை கொழும்புக்கிடையிலான புகையிரத சேவைகளே இவ்வாறு சேவையில் ஈடுபடவுள்ளன.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தினசரிப் போக்குவரத்தில் ஈடுபடும் புகையிரதங்களின் சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-4)

# சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பாராளுமன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்

## பாராளுமன்ற செயலர் அறிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கொவிட்-19 தொற்று நோய்க்கு உள்ளாக்கியுள்ள நிலையில் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய சுகாதார விதிமுறைகளுக்கு அமைய பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி உரிய ஆலோசனைகளைப் பெற்றிருப்பதாகவும் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளான பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்றிருந்த சகல இடங்களையும் கிருமி நீக்கத்துக்கு உள்ளாக்கியிருப்பதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.


அதேநேரம், அடுத்த பாராளுமன்ற அமர்வுகளின் செயற்பாடுகள் குறித்துத் தீர்மானிக்கும் நோக்கில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடவுள்ளது.

இதில், சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்கள் எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல செயலகம் தயாராக இருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மேலும் தெரிவித்தார். (நி-4)

# குடும்ப சட்டத்தில் மாற்றம் கொண்டுவர அரசு தீர்மானம்

(கொழும்பு)

விவாகரத்து, திருமண முடிவுறுத்தல், விவாகரத்து கொடுப்பனவு, பிள்ளைகள் பொறுப்பு மற்றும் சொத்துப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் குடும்பச் சட்டத்தை மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



திருமணம், விவாகரத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய நடைமுறைகள் 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருமண பதிவு கட்டளைச் சட்டத்திலும், குடியியல் வழக்கு சட்டக்கோவையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போதைய கட்டளைக்கு ஏற்ப கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் காணப்படுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதன்படி குடும்பச் சட்டம் தொடர்பாக பிற நாடுகளில் நிலவும் சட்ட நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்ய, நீதி அமைச்சர் அலி சப்ரி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் நிபுணர் குழுவின் உதவியுடன் பிற நாடுகளில் நிலவும் சட்ட நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்ய தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி-4)

# கொரோனாவின் நீண்டகாலப் பாதிப்புக்கள் ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கடும் பாதிப்புக்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலான நோயாளிகள் தொற்று ஏற்பட்ட ஆறு மாதங்களுக்குப் பின்னரும் சோர்வு, தூக்கமின்மை உள்ளிட்ட பலவித பாதிப்புக்களை எதிர்கொள்வது சீனாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.**

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் குணமடைந்தாலும் கூட அவர்கள் நீண்டகால உடல் நலப் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதையே ஆய்வு முடிவுகள் காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளாகி மீண்டவர்களிடையே நீண்ட காலம் நீடிக்கும் சோர்வு மற்றும் தூக்கமின்மை என்பன பொதுவான பாதிப்புக்களாக ஆய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்துடன் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்கள் நீண்டகால உளவியல் சிக்கல்களையும் எதிர்கொள்வதாக இந்த ஆய்வு முடிவு கூறுகிறது

இதேவேளை, தொற்றுக்குள்ளாகிக் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்ட நோயாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர்களுக்கு நுரையீரல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்று நோயிலிருந்து குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்னரும் பலர் நீண்டகால தாக்கங்களோடு வாழ்கின்றனர் என்பதை எமது ஆய்வுகள் நிரூபிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)



யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமையை கண்டித்து கனடாவில் வாகனப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 4 ஆயிரத்திற்கும் அதிகமான வாகனங்களில் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

# அமெரிக்க பாராளுமன்ற வன்முறை; 70 ஆயிரம் டுவிட்டர் கணக்குகள் முடக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற வன்முறை தொடர்பாக 70 ஆயிரம் டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளரான ஜோ பிடன் வெற்றிபெற்றார். அந்த வெற்றியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் அந்நாட்டு பாராளுமன்ற கட்டடத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றது.

அப்போது அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்த குடியரசு கட்சியை சேர்ந்த ட்ரம்ப் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையை கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச்சூடு உள்ளிட்ட வழிமுறைகளை கையாண்டனர்.

இந்த வன்முறை சம்பவத்தில் பொலிஸார் உட்பட மொத்தம் 5 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்க வரலாற்றில் இந்த நிகழ்வு ஒரு கறுப்பு நாளாக பார்க்கப்படுகிறது. பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற இந்த வன்முறை சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து வன்முறையை தூண்டும் வகையில் கருத்து தெரிவித்ததாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் டுவிட்டர், பேஸ்புக் வலைத்தள பக்கங்கள் நிரந்தரமாக முடக்கப்பட்டன.

இதற்கிடையில், பாராளுமன்ற கட்டட வன்முறை தொடர்பாக சமூக வலைத்தளமான டுவிட்டரில் பல்வேறு கருத்துக்கள், வீடியோக்கள் பதிவு செய்யப்பட்டு வந்தன. அந்த பதிவுகளை நீக்கும் நடவடிக்கையில் டுவிட்டர் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், பாராளுமன்ற கட்டட வன்முறை தொடர்பான கருத்துக்களை பதிவிட்டதாக 70 ஆயிரம் டுவிட்டர் கணக்குகளை டுவிட்டர் நிறுவனம் முடக்கியுள்ளது.

வெறுப்புணர்வை தூண்டும் வகையிலும், வன்முறையைத் தூண்டும் வகையிலும் கருத்துக்கள், வீடியோக்களை டுவிட்டர் தளத்தில் பதிவு செய்யப்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கோவிஷீல்டு தடுப்பூசி விநியோகம் ஆரம்பம்

(சென்னை)

கொரோனா வைரஸ்க்கு எதிரான கோவிஷீல்டு தடுப்பூசி விநியோகம் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் கண்டுபிடித்த கோவிஷீல்டு தடுப்பூசியையும், ஐதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவேக்சின் தடுப்பூசியையும் இந்தியாவில் பயன்படுத்த மருந்து தர கட்டுப்பாடு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

கோவிஷீல்டு தடுப்பூசியை மத்திய அரசு கொள்முதல் செய்துள்ளது. இந்த தடுப்பூசியை இந்தியாவிலுள்ள சீரம் இன்ஸ்டியூட் நிறுவனம் தயாரித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.(நி-4)

# சில மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தமிழக அரசு அனுமதி

(சென்னை)

சிவகங்கை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தலாம் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது

"விலங்குகளுக்கு எதிரான கொடுமை தடுப்பு திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் சில இடங்களில் 15 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதி வரை ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த ஆளுநர் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளார். (நி-4)



# ஜப்பானில் கடும் பனிப்பொழிவு 10 பேர் பலி, 300 பேர் காயம்



(டோக்கியோ)

ஜப்பானில் தொடரும் கடுமையான பனிப்பொழிவின் விளைவாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்வடைந்துள்ள நிலையில் 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (நி-4)

# புதிய பாராளுமன்றிற்கு அனுமதி

(டில்லி)

14 உறுப்பினர்களை கொண்ட பாரம்பரியக் குழு புதிய பாராளுமன்ற கட்டடத்தை கட்ட ஒப்புதல் வழங்கி உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

தலைநகர் டில்லியில் ரூ. 971 கோடி செலவில் புதிய பாராளுமன்ற கட்டடம் கட்டப்பட உள்ளது.

இதற்காக பிரதமர் மோடி கடந்த மாதம் அடிக்கல் நாட்டினார். எனினும் புதிய பாராளுமன்ற கட்டடம் கட்டுவதற்கு எதிராக உச்ச நீதிமன்றில் பல வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இதனால் கட்டுமான பணிகள் தொடங்கப்படாமல் இருந்தன.

இந்தச் சூழலில் கடந்த சில தினங்களுக்கு முன்பு புதிய பாராளுமன்ற கட்டடத்தை கட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கி தீர்ப்பளித்தது. (நி-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சின்னம்மான் பச்சரிசி அல்லது சித்திரப்பலாவி மூலிகையும் பெரியம்மான் பச்சரிசியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சின்னம்மான் பச்சரிசி
Botanical Name: Euphorbiat hymifolia
Family: Euphorbiaceae
பெரியம்மான் பச்சரிசி
Botanical Name: Euphorbia hirta
Family:Euphorbiaceae

சின்னம்மான்பச்சரிசியானது ஓராண்டு வாழக்கூடிய சிறிய தரையோடு படர்ந்து வளரும் செடியாகும். இலைகள் சிறியளவும் எதிரிலை அடுக்கம் கொண்டவை. இலைக் காம்புகள் மிகவும் சிறியவை. ஒருபாலான பூக்கள். வருடம் முழுவதும் பூக்கும்.

பயிரிடப்பட்ட நிலங்களில் களைப் பயிராக பரம்பிக் காணப்படும்.

சின்னம்மான் பச்சரியை கீரையாக தனியாகக் கடைந்தோ துவரம் பருப்புடன் சேர்த்தோ சமைத்து சாப்பிடலாம். உடலில் அதிகரித்த உஷ்ணத்தை தணிக்கக் கூடியது.

சின்னம்மான் பச்சரிசி இலைச்சாற்றில் 15-30 மில்லி அளவு விஷக்கடிகளுக்கு உள்ளுக்கு கொடுக்கலாம்.

பெண்களுக்கு மாதவிடாய் ஒழுங்காக இல்லாத போது இதன் வேரில் 35 கிராம் எடுத்து நன்கு கழுவி 200 மில்லி நீர் விட்டு 50 மில்லி ஆக வற்றக் குடிநீர் காய்ச்சி காலை, மாலை எடுக்க மாதவிடாய் ஒழுங்காகும்.

குழந்தைகட்கு குடலினுள் புழுக்களை அகற்றிட இதன் இலைகளையும் விதையையும் குடிநீர் காய்ச்சி 10 தொடக்கம் 20 மில்லி அளவு தினமும் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு எடுக்க வேண்டும்.

வட்டக்கடிக்கு இதிலிருந்து வடியும் பாலை வெளிப் பிரயோகமாக பூசலாம். இதன் இலைகளிலிருந்து வடியும் பாலை உதடு, நா வெடிப்பிற்கு பூசலாம்.

சின்னம்மான் பச்சரிசி செடியை வேருடன் சேகரித்து கழுவி உலர்த்தி பொடித்து கற்கண்டு பொடியை அதேயளவு சேர்த்து வேளைக்கு 35 கிராம் அளவு உட்கொண்டு உடனே காய்ச்சிய பசுவின் பாலை குடிக்க உடலிற்கு பலத்தைக் கொடுக்கும்.

இதன் இலைகளை நன்கு அரைத்து குழந்தைகட்கு ஏற்படும் அக்கிக்கு பூசலாம்.

சின்னம்மான் பச்சரிசி இலை-2 கைப்பிடியளவு, தூதுவளையிலை - 2 கைப்பிடியளவு, பசுநெய்-10 கிராம், உள்ளி- 3 பல்லு, உழுந்து-10 கிராம், தேங்காய்ப்பூ- சிறிதளவு, சுட்ட புளி - சிறிதளவு, உப்பு- தேவையான அளவு, செத்தல் மிளகாய் - 6, நெய்யில் வறுத்த மிளகாய், உப்பு, புளி இவற்றை அம்மியில் அரைத்து இவற்றுடன் மேற்படி இலைகள் இரு வகையையும் நெய்விட்டு வதக்கி உளுந்தையும் வறுத்து அரைத்து தேங்காய் பூவையும் சேர்த்தரைத்து உள்ளியையும் வைத்தரைத்து துவையல் செய்து வாரத்தில் 4 நாட்கள் சாப்பிட்டு வர நீர்த்து உடைந்துபோன தாதுவை கட்டுப்படுத்தி தாது விருத்தியுடன் உடல் பலத்தையும் பெறச் செய்யும்.

### நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்க

சின்னஅம்மான்பச்சரிசி -50 கிராம் (உலர்த்தி எடுத்த பொடி), கசகசா -50 கிராம், சிவத்தப்பச்சரிசி - 50 கிராம், கடலைப்பருப்பு- 50 கிராம், பொட்டுக் கடலை-50 கிராம், சோளமா -50 கிராம், தினைமா-50 கிராம், உளுத்தம்மா-50 கிராம், பயறு-50 கிராம் சிவத்தப்பச்சரிசி, கடலைப் பருப்பு, பொட்டுக்கடலை, கசகசா இவற்றையும் இடித்து பொடித்து மாவாக்கி ஏனைய மாக்களுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். 6 மாத குழந்தைகளிலிருந்து 6 வயது குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சத்துணவாகும்.

குழந்தைகட்கு இந்த மாவை பனைவெல்லம் சேர்த்து கஞ்சி வைத்து கொடுக்க என்பு, பல் பலமடைந்து வளர்ச்சியடைவதுடன் உடலிற்கு நல்ல பலத்தையும், நோய் எதிர்ப்பாற்றலையும் ஊக்குவிக்கும்.

சின்னம்மான் பச்சரிசி இலைகளை நெய்யில் வதக்கி சாதத்துடன் சாப்பிட்டு வர உதடு வெடிப்பு, உதட்டுப்புண் ஆகிவைகளை ஆற்றி உடல்வறட்சியை போக்கி குளிர்ச்சியை உண்டுபண்ணும்.






சின்னம்மான் பச்சரிசி, பெரியம்மான் பச்சரிசி இரண்டும் செடிவகையாகவும், ஒரே குடும்பத்தை சேர்ந்த வெவ்வேறு இன மூலிகைகளாகும்.

பெரியம்மான் பச்சரிசி குத்துச் செடியாகும். வெண்ணிற பூக்கள் பூங்கொத்தாக ஒவ்வொரு கணுக்களுக்கிடையிலும் மிளகு பருமனில் காணப்படும். இது ஒரு கீரையாகும்.

அம்மான் பச்சரிசி இலைகளை உள்ளி, வெங்காயத்துடன் சேர்த்து நன்றாக வதக்கி சட்னி தயாரித்து சாப்பிட்டுவர உடலிற்கு குளிர்ச்சியை தருவதோடு மலச்சிக்கலையும் தடுக்கின்றது.

வீக்கம், கொப்பளங்கள் உள்ள இடத்தில் இந்த இலைகளை அரைத்து பற்றுப் போட்டுவர 5 நாட்களில் குணம் கிடைக்கும்.

பாசிப்பருப்புடன் இதன் இலைகளை சேர்த்து சமைத்துச் சாப்பிட வாய்ப்புண், குடல்புண் ஆறும்.

இதன் இலைகளை ஒடிக்கும்போது வடியும் பாலை வறண்ட உதடு, நாக்குப் புண், வாய்ப்புண் போன்றவற்றிற்கு பூச அவை ஆறும்.

கறுத்த தோல் மற்றும் மருக்கள் உள்ள சருமத்தில் இதன் பாலை தடவி சில நிமிடங்கள் கழித்து இளஞ்சூட்டு நீரில் கழுவிவர அவை மறையும். தொடர்ச்சியாகச் செய்து வரலாம்.

சுத்தமான பசுப்பாலுடன் இதன் பூக்களை நன்றாக கழுவி அரைத்து கொஞ்சமாக பசுவின் பாலுடன் இதனை சேர்த்து காலையில் 18 நாட்களுக்கு தொடர்ந்து குடித்து வந்தால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.

பெரிய அம்மான் பச்சரிசி இலைகளை நிறையளவில் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து சிவத்தபச்சரிசி மாவுடன் கலந்து பிட்டு, இடியப்பம் ஆக தொடந்து 48 நாட்கள் சாப்பிட்டு வர மலட்டுத் தன்மையை நீக்கக் கூடியதாக இருக்கும்.

வயதுவந்தும் பூப்பெய்தாத பெண்களுக்கு அம்மான் பச்சரிசி இலைகளை ஆய்ந்து ஒரு கைப்பிடியளவு எடுத்து, ஒரு சட்டியில் போட்டு 10 கிராம் பெருங்காயம், 10 கிராம் எள்ளு, பனைவெல்லம் 10 கிராம் எடுத்து பசுவின் பால்விட்டு அவித்து கழுவி உலர்த்தி பொடித்து 5 கிராம் வீதம் காலை, மதியம், இரவு தேனில் 5-7 நாட்கள் தொடர்ச்சியாக கொடுத்துவர ருதுவாகாத பெண்கள் ருதுவாகி விடுவார்கள்.

வேப்பிலை 3, அம்மான் பச்சரிசி இலைகள்- 10, 3 மிளகு சேர்த்து அரைத்து காலையில் சாப்பிட்டு வர இரத்தம் சுத்தியாகும்.

எவ்வளவு பெரிய மருவாக இருந்தாலும் இந்த அம்மான் பச்சரிசி செடியின் பாலை மரு மீது கனமாக பூசிவர மருவை உதிரச்செய்யும்.

காலில் ஆணி தோன்றி இருப்பதன் காரணமாக நடக்க முடியாமல் கஷ்டப்படுபவர்கள் அம்மான் பச்சரி செடிகளை உடனேயே கொய்து அந்தச் செடியின் காம்புகளை ஒடித்தால் அதிக பால் கொட்டும். இந்தப்பாலை காலிலுள்ள ஆணியின் மேல் கனமாக தடவ வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை, மாலை தொடர்ச்சியாக 2 வாரங்கள் தடவி வந்தால் கால் ஆணிகள் வெளியே வந்துவிடும்.

பெரிய அம்மான் பச்சரிசி இலைகளை தேவையான அளவு சேகரித்து கழுவி, நிழலில் உலர்த்தி சருகுபோல் காயவைத்து உரலில் இடித்து துணியில் அரித்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு வைத்து 4 கிராம் அளவு காலை, மாலை கற்கண்டுத்தூள் சேர்த்து பசும்பாலுடன் அருந்தவும். இவ்வாறு தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டுவர தாது விருத்தி அடையும். உடலுக்கு பலத்தையும், உரத்தையும் கொடுக்கும்.

### 100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்

புரதம்-4.7 கிராம், தாது உப்பு - 3.2 கிராம், இரும்பு- 21.2மி.கிராம், கல்சியம் - 546 மி.கிராம், பொஸ்பரஸ்- 106 மி. கிராம்.

20 கிராம் பெரிய அம்மான் பச்சரிசி இலைகளோடு 100 கிராம் முளைக் கீரையை சேர்த்து சமைக்கலாம். அழுத்தமான சக்கை இருந்தால் இதைப் பொடியாக நறுக்கிக் கொள்ளலாம். இதனை சாப்பிட்டுவர உடல் குளிர்ச்சி அடையும், மலத்தை இளக்கி வெளியேற்றும். சிறுநீர் எரிச்சல் ஆகியவை தீரும். இரத்தம் சுத்தியாவதுடன் இரத்த விருத்தியும் உண்டாகும். கர்ப்பப்பை சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்த மூலிகையாகும்.

# சிவில் நிர்வாகத்தில் இருந்து விலகி இராணுவ நிர்வாகத்தை நோக்கிச் செல்கிறது

## திஸ்ஸ சாடல்

**(கொழும்பு)**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியின் செயற்பாடுகள் நாடு சிவில் நிர்வாகத்திலிருந்து விலகி இராணுவ நிர்வாகத்தை நோக்கிச் செல்கின்றதை வெளிக்காட்டுகின்றது."**



இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

"அரசின் பலவீனத்தையும் ஜனாதிபதியின் குறைபாடுகளையும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். இவ்வாறு சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு அந்தக் குறைபாடுகளை நீக்கிக்கொள்ள வேண்டுமே தவிர கருத்தைத் தெரிவித்தவருக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இவ்வாறான செயற்பாடுகள்- சிவில் நிர்வாகத்திலிருந்து விலகி நாடு இராணுவ நிர்வாகத்தை நோக்கிச் செல்கின்றது என்பது தெளிவாகின்றது.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்க்கின்றது. நாட்டின் தலைவரொருவர் இவ்வாறு கருத்துக்களைத் தெரிவிப்பது பொருத்தமற்றது. இவ்வாறான குணாதிசயம் தலைமைத்துவப் பண்புக்கும் பொருத்தமானதல்ல.

கொரோனாத் தொற்றிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசானது பொருளாதாரம், நிர்வாகம் என்பவற்றில் மாத்திரமின்றி கொரோனாக் கட்டுப்பாட்டிலும் தோல்வியடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுவது சாதாரண விடயமாகும் என்றும், அதனால் பாராளுமன்றத்தை முழுமையாக மூட வேண்டிய தேவை கிடையாது என்றும் சபாநாயகர் கூறியிருக்கின்றார்.

பாராளுமன்றத்தை முழுமையாக மூடாமல் அதன் செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடும் கூட. ஆனால், அங்கும் பலருக்குத் தொற்று ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வது? சபாநாயகர் உள்ளிட்ட அதிகாரிகளே அதனைப் பொறுப்பேற்க வேண்டும். முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் பாரா ளுமன்றத்தினுள் பாரதூரமான நிலைமையே ஏற்படும்.

முழு உலகமும் அவதானம் செலுத்தியுள்ள கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு நிதி இல்லை என்று கூற முடியாது. காரணம் கொரோனாத் தொற்றுக்காக பல்வேறு வகையில் நிதி உதவிகள் அரசுக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறான நிலைமைக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் சின்னத்தை மாற்றுவதற்கு பல பில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கின்றது. அது தற்போது அநாவசியமான செலவாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## விமலவீர திஸாநாயக்காவையும் தொற்றியது கொரோனா



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


ஏற்கனவே, தயாசிறி ஜயசேகர, ரவூப் ஹக்கீம் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நான்காவது பாராளுமன்ற உறுப்பினராக விமலவீர திஸாநாயக்க பதிவாகியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களிடையே அதிகரித்துவரும் கொரோனா தொற்றையடுத்து, இன்றும் நாளையும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை பாராளுமன்றத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தப் பரிசோதனையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்க முடியும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2205

### தர்மினி




### லேனுகா




### துசாந்




### தனோஜ்




### வனுஷா




### நயன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொவிட்- 19 தாக்கத்தால் ஏற்பட்ட சவால்களை வெற்றி கொள்ள வேண்டும்

**(கொழும்பு)**

**கொவிட்-19 வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு கொண்டுவரப்படும் என குறிப்பிட முடியாது. ஆகவே கொவிட் தாக்கத்தினால் எழுந்துள்ள சவால்களை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் வெற்றிக் கொள்ளவேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

இங்கிலாந்து நாட்டு பிரஜைகளை தவிர ஏனைய நாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தரலாம். வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளினால் கொவிட்-19 வைரஸ் தாக்கம் பரவலடையாது. உக்ரேய்ன் நாட்டு பயணிகள் நாட்டுக்கு வருவதை தடுக்க முடியாது.

இரத்தினபுரி மாவட்ட செயலக பிரிவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நகர அபிவிருத்தி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னர் வணிக விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும். சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த புதிய சுகாதார திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம்,சர்வதேச விமான சேவைகள் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் பரிந்துரைகளுக்கு அமையவே சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் வரும் சுற்றுலாப்பிரயாணிகள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதனைச் சுற்றுலா சேவை முகவர்களுக்கு தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.

சுற்றுலாப்பிரயாணிகளை அழைத்து வரும் செயற்றிட்டம் தொடர்ந்து அவதானிக்கப்படுகிறது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலில் சுமார் 30 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளார்கள். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் சுற்றுலாத் துறை சேவை கொவிட்-19 வைரஸ் தாக்கத்திற்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 எப்போது முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று எவராலும் குறிப்பிட முடியாது.

ஆகவே எழுந்துள்ள சவால்களை சுகாதார பாதுகாப்புக்கு மத்தியில் வெற்றிக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு வேட்பு மனுத் தாக்கல்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்க தலைவர் பதவிக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதன்படி இம்முறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத்தரணிகளான சாலிய பீரிஸ் மற்றும் குவேர டி சொய்ஸா ஆகியோர் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (நி-4)

BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

# உள்ளூராட்சி தேர்தல் முறைமை பரிசீலனை செய்ய குழு நியமனம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் முறைமையை மீள் பரிசீலனை செய்வதற்காக மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்கவின் தலைமையில் குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குழுவில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயலத் ரவி திஸாநாயக்க ஆகியோர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கட்டளை சட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ கலப்பு முறையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டதாக பலதரப்புக்களிடமிருந்து முறைபாடுகள் கிடைத்திருந்தன.

இந்நிலையிலேயே அவற்றை ஆராய்ந்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உழைப்பின் பெருமை!

ஒரு புகையிரத நிலையம். அங்கே ஒருவர் காலாற நடந்து வந்து கொண்டு இருந்தார்.அவர் வீட்டிலே நிறைய நேரம் எழுதுவார். எழுதுகின்ற நேரம் போக ஏனைய நேரங்களில் தம்முடைய சொந்த வயல்களில் வேலை பார்ப்பார்.

வேலை செய்து முடிந்ததும் பக்கத்திலே இருந்த புகையிரத நிலையத்திற்குப் போவார். அங்கே காலாற கொஞ்சம் நேரம் நடந்து வருவார்.

இது அவருடைய தினசரி வழக்கம். இது மாதிரித்தான் அன்றைக்கும் நடந்து வந்து கொண்டிருந்தார். அந்த சமயம் அங்கே பிளாட்பாரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அந்த அம்மா இவரை கைதட்டிக் கூப்பிட்டார்.

ஐயா..கொஞ்சம் இப்படி வாங்களேன் என்றார்.இவரும் போனார். என்ன விடயம் என்று கேட்டார். அந்தம்மா விபரம் சொன்னார்.

ஐயா நானும் என் வீட்டுக்காரரும் இங்கே வந்தோம். அதோ நிற்கின்ற அந்த ரயிலில் ஏறி ஊருக்குப் போக வேண்டும்.என்னுடைய வீட்டுக்காரர் அதோ அந்த உணவு விடுதிக்குப் போயிருக்கின்றார். இன்னும் வரவில்லை.

அதற்குள்ளே ரயில் புறப்பட்டுவிடும் போல இருக்கின்றது.நீங்கள் ஓடிப்போய் அவரை அழைத்துக் கொண்டு வந்துவிடுவீர்களா? என்றார். சரி.. என்றார்.

அந்தம்மா தன் கணவருடைய அடையாளங்களையும் சொன்னார். இப்படி இப்படி இருப்பார் என்று. இவர் அதைக் கவன மாகக் கேட்டுக் கொண்டார். நீங்கள் போய் அழைத்துக் கொண்டு வாருங்கள்.வந்த உடனே உங்களுக்கு உண்டான கூலியையும் கையோடு கொடுத்திடுவேன் என்றார் அந்தம்மா.

இவர் போனார். அந்தம்மா சொன்ன அடையாளங்களை வைத்து அவர்கள் வீட்டுக்காரரைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்தார். இந்த அம்மாவிடம் ஒப்படைத்தார்.

உடனே இந்தம்மா ஏற்கனவே சொன்னபடி அவருக்கான கூலிப் பணத்தையும் கொடுத்தார். அவரும் எதுவும் மறுப்பு சொல்லாமல் வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டு திரும்பினார்.எதிரிலே ஏற்கனவே தெரிந்த நண்பர் ஒருத்தர் வந்துவிட்டார். அவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்வதை இந்தம்மா காதிலே வாங்கினார்கள்.

அப்பொழுது தான் அவர்களுக்கு இந்த உண்மை புரிந்தது. அதாவது தன்னிடம் கூலி வாங்கிக் கொண்டவர் தான் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் என்று தெரிந்தது.

ரஷ்ய நாட்டின் மிகப் பெரிய ஞானி லியோ டால்ஸ்டாய். சோவியத் நாட்டின் ஈடு இணையற்ற இலக்கிய மேதை.இது தெரிந்தவுடன் இந்தம்மா அவரிடம் ஓடினார்.

ஐயா..உங்களுக்கா நான் கூலி கொடுத்தேன். நான் பெரிய தவறு செய்துவிட்டேன் என்று சொல்லி வருத்தப்பட்டார்.பரவாயில்லை ஆனால் நீங்கள் எனக்குக் கொடுத்த கூலிப்பணத்தை நான் திரும்பத் தர மாட்டேன். ஏன் தெரியுமா..? அது நான் உழைத்துப் பெற்ற தொகை என்றார்.

யாருக்குமே அதிக மகிழ்ச்சியைத் தரும் பணம் எது என்றால் அது அவர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த பணம் தான். எம்மவர்கள் சிலர் பேருக்கு உழைக்காமல் தீயவழியில் வருகின்ற பணம் கூட மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஒரு பெரிய தொழிற்சாலை.அதன் முதலாளி உள்ளே யாரும் சிகரெட் பிடிக்கக் கூடாது என்று கடுமையான சட்டம் போட்டிருந்தார்.ஒரு நாள் அந்த முதலாளி தன்னுடைய தொழிற்சாலையை சுற்றிப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருக்கின்றார். அப்பொழுது ஒரு இளைஞன் உள்ளே சிகரெட் பிடித்துக் கொண்டு இருந்தான். அதைப் பார்த்தவுடன் முதலாளிக்குக் கோபம் வந்து விட்டது.உடனே அவர் தனது உதவியாளரைக் கூப்பிட்டார். அதோ பார் அவன் சிகரெட் பிடித்திருக்கின்றான். அவன் கணக்கை முடித்து வெளியிலே அனுப்பி விடு என்று உத்தரவு போட்டுவிட்டார்.

அதன்படியே உடனே அவனை அழைத்துக் கொண்டு போய் கணக்குப் பார்த்து சம்பளமாக்கி, ஏனைய உதவித் தொகை எல்லாவற்றையும் மொத்தமாக கையிலே கொடுத்து விட்டுவா என்று சொல்லி விட்டார்.அவன் பணத்துடன் வெளியிலே வந்தான். வெளியில் நின்று கொண்டிருந்த ஒருத்தனிடம் சொன்னான்.

என்னப்பா இது? என்னுடைய நண்பன் ஒருத்தனைப் பார்க்க இந்த மில்லுக்குள்ளே போனேன். பேர் என்ன வென்று கேட்டுக் கொண்டு ஒரு 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொடுத்து போயிட்டு வா என்று சொல்லி வெளியில் அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றான் ஆச்சரியமாக.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

10




கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.


**இந்தியா - இலங்கை கடல் எல்லை ஒப்பந்தங்கள்**

இலங்கையைப் பொறுத்தவரையில் இதன் அமைப்பு, அதன் அமைவிடம் காரணமாக சூழவர சர்வதேச கடல் எல்லைகளுக்கு அமைவாகத் தமது எல்லைகளைக் கொண்டிருந்த போதிலும் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் இந்தியாவுக்கு இடைப்பட்ட கடற்பரப்பில் எல்லைகள் வேறுபட்ட இயல்பு கொண்டனவாக காணப்படுகின்றன.

காரணம் இலங்கை - இந்தியாவுக்கு இடைப்பட்ட கடற்பரப்பு குறுகியதாக காணப்படுவதனாலாகும். ஆரம்பத்தில் ஆள்புல எல்லை 3 மைல்களாகவும் பின்னர் 6 மைல்களாகவும் இருந்தபோது இலங்கை - இந்திய கடலோர எல்லைகளில் சிக்கல்கள் எழவில்லை. ஆள்புல எல்லையை 12 மைல்களாக விஸ்தரித்தபோது குறுகிய பாக்கு நீரிணைப் பகுதியின் இடைவெளி 24 மைல்களுக்கு குறைவாக இருந்தமையினால் இவ் எல்லைக் கோடுகள் ஒன்றின் மேல் ஒன்று மேற்படியும் **(Overlap)** நிலை தோன்றியது. இதன் காரணமாக அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படையில் இலங்கை - இந்திய கடலோர எல்லைகள் வகுக்கப்பட்டன.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச கடல் எல்லையை வரையறுக்க 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இரு நாடுகளும் கடல் எல்லை ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டன. இரு நாடுகளும் இந்தியப் பெருங்கடலில், குறிப்பாக பாக் நீரிணையில் **(Park strait)** நெருக்கமாக அமைந்திருப்பதால், கடல் எல்லை சம்பந்மான இவ் உடன்படிக்கைகள் சட்ட அமுலாக்கத்தையும் வள நிர்வாகத்தையும் எளிதாக்குவதற்கும் மோதல்களைத் தவிர்ப்பதற்கும் அவசியமாக இருந்தன.

முதல் ஒப்பந்தம் ஆதாம் பாலம் மற்றும் பாக் நீரிணைக்கு இடையிலான நீரில் கடல் எல்லை தொடர்பானது. இது ஜூலை 8, 1974 இல் நடைமுறைக்கு வந்தது. இரண்டாவது ஒப்பந்தம், மார்ச் 23 அன்று கையெழுத்திடப்பட்டு, மே 10, 1976 இல் நடைமுறைக்கு வந்தது. இது மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் கடல் எல்லைகளை வரையறுத்தது. இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுகள் 1976 ஜூலை மாதம் மன்னார் வளைகுடாவில் முக்கோண சந்திப்பு இடத்தை நிர்ணயிப்பதற்கான மற்றொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. பின்னர் 1976 நவம்பர் 22 இல் இந்தியாவும் இலங்கையும் மன்னார் வளைகுடாவில் கடல் எல்லையை விரிவுபடுத்துவதற்கான மற்றொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இவ் ஒப்பந்தம் 1977 பெப்ரவரி 5 இல் நடைமுறைக்கு வந்தது.

**கச்சதீவு பற்றி...**

கச்சதீவானது நெடுந்தீவிற்கு தென் மேற்கே ஏறக்குறைய (9மைல்) 14.4 கி.மீ.தொலைவிலும் பாம்பன் - இராமேஸ்வரத்திலிருந்து வடகிழக்கே (10 மைல்) 16 கி.மீ.தொலைவிலும் இத்தீவு அமைந்துள்ளது. இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்கு நீரிணையின் மையப்பகுதியில் இத்தீவு அமைந்துள்ளது.


இத்தீவின் நீளம் சராசரி (1 மைல்) 1.6 கி.மீ.அகலம் சராசரியாக (300 யார்) 275 மீற்றர். இதன் பரப்பளவு 82 ஹெக்டேயர்கள் ஆகும். இங்கு வரண்ட வலயத்திற்குரிய முட்புதர்கள் தவிர சிறிய புற்றரைகளும் கடற்கரையோரத் தாவரங்களும் படர்ந்துள்ளன. இதன் கிழக்கு அரைப்பகுதி முருகைக் கற்களால் ஆனது. மற்றைய பகுதி மணற்றிட்டுகளைக் கொண்டு காணப்படுகின்றது.

நன்னீர் நிலைகள் எதுவுமற்ற இத்தீவில் எவ்வித மிருகங்களும் இல்லை. கடல் பாம்புகள் அவ்வப்போது தென்படுகின்றன. 1974 இல் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாகிய பின்னர் கிராம உத்தியோகத்தர் பிரிவு நெடுந்தீவாகும். நீதி நிர்வாகப் பிரிவு யாழ்ப்பாண மாவட்டமாகும்.

**கச்சதீவு ஒப்பந்தம்**

கச்சதீவு ஒப்பந்தம் **(Katcha theevu Agreement)** என்பது இந்திய-இலங்கை இடையே உள்ள பாக் நீரிணையில் அமைந்துள்ள, இந்தியாவுக்கு உரிமையான கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது குறித்தான ஒப்பந்தமாகும். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கையொப்பமிட்டு 8, ஜூலை 1974 ஆம் ஆண்டு முதல் செயலுக்கு வந்தது கச்சதீவு ஒப்பந்தம்.

**இலங்கையின் தரை மற்றும் கடல் ஆட்புல எல்லைகள்**




படம்-1




**முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் முன்னாள் இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும் கையொப்பமிட்டு 8, ஜூலை 1974 ஆம் ஆண்டு முதல் செயலுக்கு வந்தது கச்சதீவு ஒப்பந்தம்.**

. 1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தம் என்பது ஆதம் பாலத்திற்குத் தெற்கே மன்னார் வளைகுடா பரப்பு மற்றும் வங்காள விரிகுடா பரப்பு ஆகியவற்றில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ள கடல் உரிமைகளையும் கடல் எல்லைகளையும் வரையறுத்துக் கொள்ளும் ஒப்பந்தமாகும். 1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தப்படி, மன்னார் வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க உரிமையில்லை. கச்சதீவு ஒப்பந்தப் படி, இந்திய மீனவர்கள் கச்சதீவில் மீன்பிடி வலைகளை உலர்த்திக் கொள்ளலாம் என்றும் அங்குள்ள புனித அந்தோனியார் கோயில் திருவிழாவில் இந்தியர்கள் பங்கேற்கலாம் என்ற இரண்டு உரிமைகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கிடையில் அமைந்துள்ள கடற் பரப்புக்கள் பாரம்பரிய நீர்ப்பரப்புக்கள் எனப்படுகின்றன. இவை மூன்று நீர்ப்பரப்புக்களாகப் பிரிக்கப்படுகின்றன. 1. பாக்குநீரிணைப் பகுதி - இது ஆதாம் பாலத்திலிருந்து வடகிழக்காக யாழ்ப்பாண வட மேற்கு கரையோரப் பகுதியில் அமைந்துள்ளது. 2. வங்காள விரிகுடாப் பகுதி - இது பாக்கு நீரிணையை அடுத்து யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடகரையோரம் அமைந்துள்ளது. 3. மன்னார் குடாப்பகுதி - இது ஆதாம் பாலத்திலிருந்து மன்னார் தீவின் தென் பகுதி சார்ந்து அமைந்துள்ளது. 1974 இல் ஆதாம் பாலத்திலிருந்து பாக்கு நீரிணை வரையும், 1976 இல் மன்னார் விரிகுடாக் கடற்பரப்பிலும் வங்காள விரிகுடா கடற்பரப்பிலும் எல்லைகள் வரைவதற்கான இரு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இது பற்றி முன்னர் கூறப்பட்டது. 1974 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய கடலோர எல்லைகள் ஒப்பந்தத்தின் மூலம் அதுவரை காலமும் சர்ச்சைக்குரியதாக காணப்பட்ட கச்சதீவுப் பகுதி இலங்கையின் எல்லைக்குள் வந்தது.

(தொடரும்...)

# ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பைப் பலப்படுத்துக

## நாமல் வலியுறுத்து



(கொழும்பு)

"ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அவருக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்குக் கடுமையான உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதால், தனக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின், அண்மையில் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஐக்கிய மக்கள் சக்தியினுள் ஹரின் பெர்னாண்டோவுக்குப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவருக்கு மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக விடயங்களில் ஹரின் பெர்னாண்டோவுக்கு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால், அதற்கும் ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, கட்சியின் உள்ளகப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, ஹரின் பெர்னாண்டோவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்"என அவர் தெரிவித்தார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## தோஷங்களை விரட்டும் புனித தீர்த்தங்கள்

ஒரு ஊருக்குப் பெருமை தருவது, அந்த ஊரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் தெய்வமே. அந்த தெய்வம் தினமும் புனித நீராட உதவும் தீர்த்தம் எனப்படும் திருக்குளமாகும்.

இதனால் தான் ஒரு ஆலயம் என்று எடுத்துக் கொண்டால் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றையும் உன்னிப்பாகப் பார்ப்பார்கள். இந்த மூன்றும் சிறப்புற அமைந்துள்ள ஆலயம் எல்லா வகையிலும் சிறப்புப் பெற்று தனித்துவத்துடன் திகழும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை முறையாய் வணங்குவோர்க்கு வார்த்தை சொல்ல குரு வாய்க்கும் பராபரமே என்று தாயுமான சுவாமிகள் பாடியுள்ளார். எனவே ஒரு ஆலயத்தில் மூர்த்திக்கு இணையான சிறப்பும், மகிமையும் தீர்த்தத்துக்கு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து, புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் 90 சதவீத பக்தர்கள் திருக்குளங்களை கண்டு கொள்வதே இல்லை. அவற்றுக்கு உரிய மரியாதையையும் கொடுப்பது இல்லை. மாறாக புனித தீர்த்தங்களை மாசுபடுத்துகிறார்கள்.

இதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான ஆலயங்களில் திருக்குளங்கள் நல்ல நிலையில் இல்லை. ஒரு கோவிலுக்குச் சென்றால் அங்குள்ள புனித நீரில் நீராடவேண்டும். கை கால் அலம்பி வாய் கொப்பளித்து ஆசமனம் செய்து கோவிலுக்குள் செல்ல வேண்டும் என்பது ஐதீகம்.

ஆனால் ஆலய திருக்குளங்கள் இதையெல்லாம் செய்யக்கூடிய நிலையிலா உள்ளன? சில ஆலயங்களில் மட்டுமே தீர்த்தப்பகுதி நன்கு பேணப்படுகிறது. அந்த ஆலய தீர்த்தங்கள் மிக, மிக சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க காலத்துக்கும் முன்பே தண்ணீர் பிரவாகமெடுத்து வரும் நதிகளை வெறும் பயன்பாட்டுக்கு மட்டுமல்லாமல் அவற்றைத் தெய்வமாகக் கருதி வழிபடும் வழக்கம் இருந்தது.

அதுவும் ஒவ்வொரு நதிக்கும் ஒரு பெயரிட்டு போற்றி வழிபட்டனர். அதோடு இந்த புனித நதிகளை ஜீவநதி என்று சொன்னார்கள். ஜீவ நதி என்றால் நதிகளுக்கு உயிர் இருக்கிறது என்று அர்த்தமாகும். குறிப்பிட்ட நாட்களில் நதிகளில் புனித நீராடினால் நோய்கள் குணமாகும். மூளை சுறுசுறுப்பாகச் செயற்படும். உடலுக்குப் புதுத்தெம்பு கிடைக்கும்.

சில நதிக்கரைகளில் நம் கண்ணுக்குப் புலப்படாத மகான்கள், முனிவர்கள், சித்தர்கள் கடும் தவம் இருப்பார்கள். அவர்களது தவ வலிமையின் சில துகள்கள் நதி தண்ணீரில் பரவி வரும். அந்த நதியில் நாம் புனித நீராடும் பாக்கியம் கிடைத்தால் நமது இந்தப் பிறவியில் மட்டுமல்ல முந்தைய பிறவிகளிலும் சேர்த்த பாவ மூட்டைகள், தோசங்கள் நம்மிடம் இருந்து விலகி ஓடி விடும்.

நாம் ஒரு புனித மனிதனாக நம் ஆத்மாவை மேம்படுத்திக் கொள்ள முடியும். பௌர்ணமி தோறும் நதிகளில் புனித நீராடினால் இந்த அபூர்வ பலன் நிச்சயம் கிடைக்கும்.

நதியில் புனித நீராடுவதற்கு என்று சில நியதிகள் உள்ளன. எப்போதும் ஓடும் நதியில் நீராடுவதே நல்லது. நதி எங்கிருந்து உற்பத்தியாகி வருகிறதோ, அந்த திசை நோக்கி நீராடுதல் வேண்டும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## நித்திரையில் இருந்த சிறுவன் பாம்பு தீண்டி மரணம்

(ஹற்றன்)

நித்திரையில் இருந்த சிறுவன் ஒருவன் பாம்பு தீண்டியதால் உயிரிழந்துள்ளதாக நோட்டன் பிரிஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. ஒஸ்போன் தோட்டத்தை சேர்ந்த 12 வயதான சிறுவனே இவ்வாறு உயிரிழ ந்துள்ளார்.

அதிகாலை ஒரு மணியளவில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த சிறுவனின் கழுத்தில் பாம்பொன்று இருப்பதை கண்ட பெற்றோர் பாம்பை அடித்து வீசிவிட்டு மீண்டும் நித்திரை கொண்டுள்ளனர்.

இந்நிலையில், அதிகாலை நான்கு மணியளவில் குறித்த சிறுவன் மயக்கம் வருவது போலிருப்பதாக பெற்றோரிடம் கூறியதையடுத்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையிலே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியபோது பாம்பு தீண்டி விசமானதாலே உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. (நி-4)

## சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் அறுவருக்கு தொற்று




(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 6 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து, இதுவரை 599 கொரோனா நோயாளர்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பதிவாகியுள்ளதாக கம்பாஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் மிகாரா எப்பா தெரிவித்தார். நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட ஆறு நோயாளிகளும் இந்திய முதலீட்டு திட்டத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலையிலும் கணனி உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையிலும் பணிபுரியும் ஊழியர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் ஐந்து கொரோனா நோயாளிகள் நேற்று முன்தினம் சீதுவ சுகாதாரப் பிரிவிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## காவல் அதிகாரிகளின் சேவை நிறுத்தம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதியொருவர் சட்டத்திற்கு முரணான விதத்தில் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் இரு காவல் அதிகாரிகளின் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

## ஹிஜாஸை தடுப்பில் வைக்க அனுமதி

(கொழும்பு)

சுமார் ஒன்பது மாதங்களாக சி.ஐ.டி. தடுப்பில் உள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை மேலும் மூன்று மாதங்களுக்கு தடுப்புக் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் கோட்டை நீதவான் பிரியந்த லியனகேவுக்கு அறிவித்துள்ளது.


ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான ஆவணங்களில் பாதுகாப்பு அமைச்சர் கையெழுத்திட்டுள்ளதாக சி.ஐ.டியினர் மன்றுக்கு தெரிவித்தனர்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தற்போது ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கொவிட் 19 தொற்று காரணமாக களுத்துறை பொலிஸ் கல்லூரியில் சிகிச்சை பெறுவதாகவும் சி.ஐ.டியினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## சுண்டெலி மனிதனாக மாறிய கதை



ஒரு ஞானியின் தியானம் கலைந்தபோது ஒரு சுண்டெலி ஞானியின் முன் வந்தது. சுண்டெலியை பார்த்து ஞானி, உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

பூனையை கண்டு எனக்கு பயமாய் இருக்கிறது. என்னை ஒரு பூனையாக மாற்றி விட்டால், உங்களுக்கு புண்ணியம் உள்ளது என்றது எலி. ஞானி, எலியை பூனையாக மாற்றினார்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அப்பூனை வந்து ஞானியின் முன் நின்றது. பூனையைக் கண்ட ஞானி, இப்போது என்ன பிரச்சினை என்று கேட்டார்.

என்னை எப்போதும் நாய் துரத்துகிறது. என்னை நாயாக மாற்றிவிட்டால் நன்றாக இருக்கும் என்றது பூனை. உடனே பூனையை, நாயாக மாற்றினார் ஞானி.

சில நாட்கள் கழித்து அந்த நாய் வந்து ஞானியின் முன்பு நின்றது. இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. புலி பயம் என்னை வாட்டி எடுக்கிறது.

தயவு செய்து என்னை புலியாக மாற்றிவிடுங்கள் என்றது நாய். ஞானி, நாயை புலியாக மாற்றினார்.

சில நாட்கள் கழித்து ஞானி முன் வந்து நின்ற புலி, இந்தக் காட்டில் வேடன் என்னை வேட்டையாட வருகிறான். தயவு செய்து என்னை வேடனாக மாற்றிவிடுங்கள் என்றது புலி.

உடனே புலியை வேடனாக மாற்றினார் ஞானி. சில நாட்கள் கழித்து, வேடன் ஞானி முன் வந்து நின்றான்.

இப்போது உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார் ஞானி. எனக்கு மனிதர்களை கண்டால் பயமாக இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்தான்.

உடனே இடைமறித்த ஞானி, சுண்டெலியே உன்னை எதுவாக மாற்றினால் என்ன?

உன் பயம் உன்னை விட்டுப் போகாது. உனக்கு சுண்டெலியின் இதயம்தான் இருக்கிறது. நீ சுண்டெலியாக இருக்கத்தான் லாயக்கு என்று கூறிவிட்டார் அந்த ஞானி. ஆகையால், உள்ளத்தில் நம்பிக்கைகளையும், பயம் தன்மையும் கொண்டு உள்ளவரை, நாம் எதையும் அடையவோ, சாதிக்கவோ முடியாது.

உங்களைப்பற்றி நீங்கள் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படித்தான் ஆவீர்கள். நீங்களே உங்களை தாழ்த்திக் கொள்ளாதீர்கள்.

உங்களுடைய எண்ணங்கள் செயலற்று போனால், அச்சம்,சோர்வு போன்றவை உடலை கூணாக்கி உள்ளத்தை மண்ணாக்கிவிடும்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## இதயம் கவர்ந்த இஸ்ஸஸ் யுத்தம்



இஸ்ஸஸ் நதி

கி.மு. 333 நவம்பர் மாதத்தில் மல்லுஸ் (Mallus) பகுதியில் அலெக்சாண்டர் இருந்த போது, பாரசீக மன்னர் டேரியஸ் மீண்டும் தன்னுடைய படைப்பரிவாரங்களுடன் சொச்சி நகரில் (Sochi) முகாமிட்டு இருப்பதாகத் தகவல் கிடைத்தது.

சொச்சி என்பது அஸ்ஸிரியாவுக்கு (Assyria) அருகில் இருக்கும் பகுதி. உடனடியாகத் தனது வீரர்களை அழைத்த அலெக்சாண்டர் டேரியஸ் வந்திருக்கும் செய்தியைப் பகிரங்கமாக அறிவித்தார்.

கொஞ்சமும் தாமதிக்காமல் எங்களை வழி நடத்துங்கள். போருக்குத் தயாராக இருக்கிறோம். கோஷமிட்டனர் மாசிடோனிய வீரர்கள். சட்டென சிவந்தது அலெக்சாண்டரின் முகம்.

எப்போது போருக்குப் புறப்பட வேண்டும் என்கிற உத்தரவை நான் பிறப்பிப்பேன். அதை நீங்கள் யாரும் போதிக்க வேண்டிய அவசியம் இல்லை. நாளை தான் யுத்தம். இன்றைக்கு இல்லை.

ஆவேசமாகச் சொல்லிவிட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார் அலெக்சாண்டர். பொழுது விடிந்தது. சூரியன் கீழ் வானத்தில் தங்க நிறத்தில் ஜொலித்துக் கொண்டிருந்தான். ஓடிக்கொண்டிருந்த நதியில் சூரியக் கதிர்கள் பட்டுத் தெறித்து இஸ்ஸஸ் நதியே தங்கக் குழம்பு போல தகதகத்துக் கொண்டிருந்தது.

டேரியஸ் நெருங்கிவிட்ட செய்தி அலெக்சாண்டருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது நம்பத்தகுந்ததாக இல்லை. தனக்கு நம்பகமான வீரர்கள் சிலரை அழைத்தார். ஆராயச் சொன்னார். ஆற்றில் இறங்கிச் சென்று நோட்டம் பார்த்தனர் வீரர்கள்.

தூரத்தில் டேரியஸின் படைகள் ஆவேசமாக வந்து கொண்டிருந்தது கண்ணில் பட்டது. விரைந்து வந்து அலெக்சாண்டரிடம் விடயத்தைச் சொன்னார்கள்.

உடனடியாக தனது தளபதிகள் அத்தனை பேரையும் அழைத்தார். போருக்குத் தயாராகுங்கள் வீரர்களே. இந்தப் போர் பரிசுத்தமான வீரர்களாகிய நமக்கும் நம்மிடம் ஏற்கனவே தோற்று ஓடிப் போனவர்களுக்கும் இடையேயானது என்பதை மறந்து விடாதீர்கள். மறந்தும்கூட தோற்றுவிடக் கூடாது.

(தொடரும்)

உலகம் வீரர்களுடையது என்பது சத்தியமான வார்த்தை. வீரனாக இரு. எப்போதும் அச்சமில்லை அச்சமில்லை என்று சொல்லிக்கொள்.
– விவேகானந்தர்.

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதுப்பானை அடுப்பேறும் நேரமதில் 'பொலி' இழந்து போனதுவோ...

நாளைய நாள் தைப்பொங்கலோடு விடிகிறது. தை மாதப் பிறப்பு. தமிழர் திருநாளின் தொடக்கப் பொங்கல்.

சூரியபகவானை வழிபாடு செய்ய புத்தரிசி புதுப்பானையில் அடுப்பேறும்.

வியர்வை சிந்தி உழைத்த உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தக் காத்திருந்த வேளை கனமழை கொட்டித் தீர்த்ததை என்னவென்று சொல்வது.

அந்தோ! வானம் இடிந்து மழை கொட்ட குட்டை குளமெல்லாம் நிறைந்து வான் பாய்ந்து காட்டாறாகப் போக,

கதிர் சுமந்து தலைகுனிந்து தன்னை விளைவித்த விவசாயிக்கு மதிப்பளித்து நின்ற நெற்பயிர்கள், வெள்ளத்தில் வீழ்ந்து மூச்சுத் திணறி காப்பாற்றுவார் யாருமின்றிக் கிடக்கின்ற கோலம் கண்டு குமுறுகின்றான் விவசாயி.

வீடு வந்து சேரமுன்னர் வீழ்ந்து போன நெற்பயிரைத் தூக்கி எடுத்து முத்தம் கொடுத்து; என் தலைவிதி உன்னைச் சரித்தது. இனி என்ன செய்வது என்று நொந்து விடும் கண்ணீர், வயல் நிரம்பி வாய்க்கால் வழி ஓடும் தண்ணீரோடு கலந்தாகி கடலில் சங்கமிக்கும் நேரம்,

வரம்பெடுத்து மூலைக்குடா கொத்தி விதை பரப்பி நெல் விதைத்த நாளெல்லாம் விவசாயி தன் தோள் இறங்கா மண்வெட்டி தானும் நிலம் நோக்கி வீணாகிப்போன உழைப்பை நினைந்து துயர் கொள்ளும்.

மீண்டும் தன் வீடு சென்று நிலத்தில் உறுதியாய் கால் பதித்து நிமிர்ந்து நிற்கும் மண்வெட்டி;

என்னவனே! சோர்ந்துவிடாதே. நான் உனக்குப் பக்கபலம். மகாகவி பாடி வைத்த மீண்டும் தொடங்கும் மிடுக்கை மறவாது, மிடுக்கோடு என்னைத் தோள் ஏற்று என்கிறது.

ஆனாலும் பட்ட கடன், அடகு வைத்த தங்க நகை, மீற்றர் வட்டி ஏற்றிவிட்ட பெருந்தொகை இவற்றையெல்லாம் எப்படி அடைப்பது.

ஆ! நம்பிக்கை தந்த நெற்கதிர்கள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன.

வெள்ள அனர்த்தம், மானாவாரிப் பேரனர்த்தம் இவற்றுக்கெல்லாம் விவசாயக் காப்புறுதி இருந்தும் என்ன பயன்.

நுண்கடன் போல் பிரசாரம் செய்யாததால் விவசாயக் காப்புறுதியை யார் அறிவார்.

சரி, போகட்டும் நம்மை ஆளும் அரசாங்கம் தாங்கிப் பிடித்து நான் தருகிறேன் நட்டஈடு. நீ மீண்டும் வயல் செல் என்று சொல்லுமென்றால், எங்கள் தலைவிதி தமிழன் என்றெழுதி அதற்கும் தடை விதித்து விட்டது.

ஐயனே! யார் தூக்கி விடுவார் நம் விவசாயிகளை.

ஓ! வானமே. நீ இடிந்து வீழ்ந்தாலும் இறுக்கமாய் நின்றாலும் எங்கள் தலையில் தான் இடி விழுமென்றால், அந்த இறைவன் எதற்கு?

# இலங்கைத் தமிழர் பிரச்சினையை தங்களாலேயே தீர்த்துவைக்க முடியும்

## இந்தியப் பிரதமர் மோடிக்கு யாழ். இந்து சமயப் பேரவை கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன் வாருங்கள் என யாழ். இந்து சமயப் பேரவை இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இங்கு தமிழ் மக்கள் கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதைத் தாங்கள் நன்கறிவீர்கள். தமிழ் மக்கள் இந்நாட்டிற்கு அந்நியர் வருவதற்கு முன் தம்மைத்தாமே ஆண்டு வந்தார்கள்.

அந்நியர் இலங்கைத் தீவைக் கைப்பற்றிய பின் தமது நிர்வாகச் சுலபத்திற்காக தமிழ், சிங்கள பிரதேசங்களை இணைத்தனர். பின் இந்நாட்டை விட்டு வெளியேறும் போது இவ்வதிகாரங்களைத் தாம் வைத்திருந்தது போலவே ஒரே நிர்வாகத்தின் கீழ்கையளித்துவிட்டுச் சென்றனர். இதனால் ஜனநாயக அடிப்படையில் தமிழர் சிறுபான்மையினர் ஆகிவிட்டனர்.

சுதந்திரத்தின் பின் ஆட்சியமைத்த அரசுகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த நாட்டை நிர்வகிக்கத் தவறினர். இதனால் மனமுடைந்த தமிழ் மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். இந்நேரங்களின் போதெல்லாம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக வாக்குறுதிகளை வழங்குவதும் பின் அதனைக் குழப்புவதுமாகவே செயற்பட்டு வந்தனர்.

இதனோர் வடிவமாகவே 1987இல் இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமைந்தது. இவ் ஒப்பந்தம் தமிழர் ஓரளவு திருப்தியடையக் கூடியதாக விருந்தாலும் தமிழ் மக்களின் முழுமையான அபிலாஷைகளை நிறைவு செய்வதாக அமையவில்லை.

இதனடிப்படையில் இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இது இவ்வாறிருக்க தமிழர் உரிமைகளை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் 2009இல் இலங்கை அரசால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதன்பின் தமிழ் மக்களுக்கு பரிபூரண அதிகாரங்களை வழங்கி சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களென்று நம்பியிருந்தோம். அப்படி எதுவும் நடைபெறவில்லை. இன்று 13 ஆவது திருத்தத்தைக்கூட நடைமுறைப்படுத்தமுடியாத அளவுக்கு நிலைமை மோசமாகுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இது ஒருபுறமிருக்க, இந்து ஆலயங்கள் பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்தி தாக்கப்பட்டு வருகிறது. இங்கு ஏனைய மதங்கள் இருப்பினும் அதிகளவான அச்சுறுத்தல்கள் வெவ்வேறு கோணங்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறது.

நடைபெற்ற யுத்தத்தில் தமிழ் மக்கள் பலர் அநியாயமாகப் கொலை செய்யப்பட்டதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். இவர்கள் நினைவுச் சின்னங்கள் கூட அழிக்கப்பட்டு வருவதோடு இவர்கள் தர்ப்பண காரியங்களைக் கூடப் பொது வெளியில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனைச் செய்யாது விட்டால் ஏற்படும் தோஷங்கள் பற்றி இத்துறை சார்ந்த பூரண அதியுயர் அறிவு பெற்ற தங்களுக்கு யான் விளக்க வேண்டியது பொருத்தமற்றது. இந்நிலையில் ஏதும் செய்வதறியாதுள்ளோம்.

இந்துக்களின் பெருந்தலைவரான சேர். பொன் இராமநாதன் சொத்திலமைந்த யாழ். பல்கலைக்கழகத்தில் யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இன்னுயிர் நீத்தவர்கள் ஞாபகமாக நிறுவிய தூபி அழிக்கப்பட்டுள்ளது.

இதனால் மனமுடைந்த மாணவர்களும் அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் அவ்விடத்தில் திரண்டு போராட்டங்களை நடத்தினர்.

மேலும் இலங்கைத் தமிழரது பிரச்சினையைத் தங்களைத் தவிர எவராலும் தீர்க்கமுடியாதென்பதை யாம் நன்குணர்வோம்.

ஆன்மிக பலத்தை அபரிமிதமாகக் கொண்ட மாபெரும் உலகத் தலைவராகத் தாங்கள் திகழ்வதால் எம்மைப் பாதுகாக்கப் பொருத்தமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுதவுமாறு மிகுந்த வாராண்மையோடு கேட்டுக் கொள்கிறேன் என அக்கடிதத்தில் இந்து சமயப் பேரவைத் தலைவர் சக்திகிரீவன் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## வடமராட்சியில் திருட்டு


(கரணவாய்)

வல்வெட்டித்துறை இலந்தைக்காடு பகுதியில் அமைந்துள்ள பலசரக்குக் கடை ஒன்றின் கூரை உடைக்கப்பட்டு இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-4-60)

## திருவள்ளுவரின் ஆன்மீகச் சிந்தனைகள்



### பணிவுள்ளவனுக்கே பெருமை

❖ விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் நன்மை செய்யும் இறைவனை போற்றி வழிபடுவோருக்கு இன்பமே அன்றி எந்நாளும் துன்பமில்லை. இறைவனின் பெருமை மிக்க திருவடிகளை வணங்குவதே கற்றதனால் பெற்ற பயனாகும்.

❖ மதம் கொண்ட யானையைப் போல விளங்கும் ஐம்புலன்களையும் மனவலிமை என்னும் அங்குசத்தால் அடக்கியாளும் திறமை பெற்றவன் உயர்நிலையாகிய வானுலகத்தை அடையும் தகுதி பெறுவான்.

❖ பிறருடைய வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வது, பேராசைப்படுவது, கோபம் கொள்வது, கடுஞ்சொல் பேசுவது ஆகிய தீயகுணங்களை விலக்கி வாழ்வதே நல்வாழ்க்கையாகும்.

❖ஒருவன் மிகவும் பணிவுள்ளவாகவே இருந்து, இனிமையான சொற்களைப் பேசி வருவான் என்றால் அவனுக்கு அதைவிட வேறு பெருமை இல்லை.

❖ மிக நெருக்கடியான தருணத்தில், தன்னால் ஆன உதவியை ஒருவனுக்குச் செய்ய முயற்சிப்பவனின் பெருமை இந்த வையகத்தையும் வாகனத்தையும் விட மேலானது.

❖ ஆமை போல் ஐந்து உறுப்புக்களையும் தன் ஓட்டினுள் அடக்கிப் பாதுகாத்துக் கொள்வது போல, ஐந்து புலன்களையும் தன் மனவலிமையால் அடக்கி ஆள வல்லவனுக்கு அவ்வலிமையே பாதுகாப்பாக அமையும்.

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

## விரயங்களைச் சமாளிக்க வேண்டிய ஆண்டு

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**துலா இராசி வாசகர்களே!**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில். குரு மற்றும் சனி ஆகிய இரண்டு கிரகங்கள் சஞ்சரிக்கின்றார்கள். அர்த்தாஷ்டம குருவாகவும் அர்த்தாஷ்டமச் சனியாகவும் சஞ்சரிப்பதால். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய ஆண்டாகவும் கூடுதல் விரயங்களைக் கொடுக்கும் ஆண்டாகவும் அமையும் என்றே கருதலாம். சுக ஸ்தானத்தில் வலிமையான கிரகங்கள் சஞ்சரிப்பதோடு. இரண்டில் கேதுவும் எட்டில் ராகுவும் இருந்து சர்ப்ப தோஷ அமைப்பை உருவாக்குகிறது. எனவே ஏற்றமும் இறக்கமும் கலந்த நிலை உருவாகும்.

குருச்சந்திர யோகம் மற்றும் நீச்சபங்க இராஜயோகம் போன்ற யோகங்கள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் உருவாகின்றது. கிரக நிலைகள் சாதகமாக இருக்கும் பட்சத்தில் எதைச் செய்தாலும் வெற்றி கிடைக்கும். ஆனால் அர்த்தாஷ்டமச் சனி என்ற அமைப்பு உங்கள் இராசிக்கு வருவதால் எதிர்பாராத மற்றும் எதிர்பார்த்த விரயங்களும் ஏற்படலாம். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்தும் அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைக் கேட்டும் செயற்பட்டால் சிரமங்களில் இருந்து விடுபட இயலும்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன். தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு கேதுவும் இருக்கின்றார். அஷ்டம ஸ்தானத்தில் ராகு இருக்கின்றார். இரண்டு பாம்பு கிரகங்களின் ஆதிக்கத்திற்குள் சந்திரன் நீங்கலாக மற்ற கிரக்ங்கள் அனைத்தும் இருக்கின்றன. எனவே இனம்புரியாத கவலை தொடர்ந்தபடியே இருக்கும். பண வரவு ஒரு மடங்கு வந்தால் செலவு இரு மடங்காக உயரும்.

சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது. வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்பட்டு பாராமுகமாக இருப்பர். 3 இல் சூரியன் உள்ளதால் இடமாற்றங்கள் எளிதில் கிடைக்கும். உடன்பிறப்புகளில் ஒருசிலர் உயர்ந்த நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு மக்கள் செல்வாக்கு குறையாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

அர்த்தாஷ்டம குரு மற்றும் அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கத்தால் ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கும். வியாபாரத்தில் சறுக்கல்கள் ஏற்படும். வாகனப் பழுதுகளும் வாகனங்களால் பிரச்சினைகளும் உருவாகலாம். புதனின் பலத்தால் பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் திடீரென இடமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். 7 இல் செவ்வாய் இருப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அப்படி இடம் வாங்கும் பொழுது. விசாரித்து வாங்குவது நல்லது. அஷ்டமத்தில் ராகு இருப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது.

### மகர குருவின் சஞ்சாரம்

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் நீச்சம் பெறுகின்றார். 3. 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் நீச்சம் பெறுவது யோகம்தான். மறைவிடத்திற்கு அதிபதி நீச்சம் பெறும்பொழுது ஓரளவு நற்பலன்களையே வழங்கும். குறிப்பாக சகோதர ஒற்றுமை பலப்பட வைக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களை பங்கிட்டுக் கொள்ளும் பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையில்தான் இருக்கும்.

6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு பகவான் விளங்குவதால் அவர் நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். குரு வலிமை இழக்கும் நேரம் வளர்ச்சி கூடும். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்' என்பதற்கேற்ப சில நல்ல வாய்ப்புகளும் வரலாம். பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் செய்பவர்கள் 'மூலதனம் போதவில்லையே' என்று கவலைப்பட வேண்டாம். வெளிநாட்டில் உள்ள உறவினர்களோ. நண்பர்களோ உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். சகப் பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லையின் விளைவாக புதிய உத்தியோகத்தில் சேர ஆர்வம் காட்டுவீர்கள். ஆரோக்கியத்தில் மட்டும் அதிக அக்கறை காட்ட வேண்டும். சங்கிலித் தொடர்போல வந்த கடன் சுமை குறைவதற்கான அறிகுறிகள் தென்படும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து. அதை விற்பதன் மூலம் வரும் தொகையால் கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள்.




### குருவின் பார்வை பலன்கள்

புத்தாண்டில் மகரத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை. உங்கள் இராசிக்கு 8. 10. 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே இந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றது. 8 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் இழப்புகள் ஏற்பட்டாலும் அதை ஈடு செய்யும் வாய்ப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய நேரம் என்றாலும் மாற்று மருத்துவத்தை மேற்கொண்டால் நோய் துரிதகதியில் குணமாகும். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். தொழிலை விரிவு செய்ய வங்கிகளில் கேட்ட கடனுதவி கிடைக்கலாம். பெண் பிள்ளைகளின் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வழிபிறக்கும். வெளி நாட்டிலிருந்து வர முடியாத நிலையிலிருந்த உறவினர்கள். இப்பொழுது சொந்த ஊர் திரும்புவார்கள்.

கும்ப குருவின் வக்கிர காலத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியிலேயே பதிகின்றது. 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்க்கிறார். 'ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன்தரும்' என்பதற்கேற்ப பொருளாதாரத்தில் உள்ள பற்றாக்குறை மாறும். புதிய திட்டங்கள் தீட்டி வெற்றி காண்பீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் சூழல் நிலவும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் மாறி தகுந்த ஆதரவு கிடைக்கும். பெற்றோர்கள் கேட்ட உதவியைச் செய்வர். மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். வெளிமாநிலங்களில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

### குருவின் வக்கிர காலம்

16.6.2021 முதல் 13.9.2021 வரை. கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு வக்கிரம் பெறுவதால் பிள்ளைகளின் பழக்க வழக்கத்தில் மாறுதல்கள் ஏற்படும். பிரச்சினைகள் உருவாகாமல் இருக்க அவர்களை உங்கள் கண்காணிப்பிலேயே வைத்துக்கொள்ளுங்கள். வாங்கிய சொத்துக்களால் பிரச்சினைகள் ஏற்படும். நம்பிக்கைக்குரிய பணியாளர்கள் உங்களை விட்டு விலக நேரிடலாம். நண்பர்களை நம்பி செயற்பட இயலாது. முக்கிய புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்தில் குறுக்கிடுவர். நிச்சயித்த காரியங்களில் மாற்றங்கள் ஏற்படும். வரும் வரன்களில் கூட தடை ஏற்படலாம்.

14.9.2021 முதல் 13.10.2021 வரை. மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். 4 இல் குரு வக்கிரம் பெறும்பொழுது மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். 'ஆரோக்கியத்தை சீராக வைத்துக்கொள்ள முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். வீட்டில் உள்ள மின்சாதனப் பொருட்கள் அடிக்கடி பழுதாகி கவலையைக் கொடுக்கும். அலுவலகத் தகவல்களை அடுத்தவர்களிடம் சொல்ல வேண்டாம். வியாபாரத்தில் நெளிவு. சுளிவுகளை உங்களோடு இருந்து கற்றுக்கொண்ட பணியாளர்கள் திடீரென விலக நேரிடும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் கிடைப்பது அரிது. வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். நிதானத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4. 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கூட்டாளிகள் உங்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது. தாய்வழி உறவினர்களால் பகை உண்டு. இடம் வாங்கும் முயற்சியில் தாமதங்கள் ஏற்படுவது மட்டுமல்லாமல் பத்திரப்பதிவில் சிக்கல்களும் வரலாம். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்பட்டு மனக்கவலையைக் கொடுக்கும்.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை. 4.6.2021 முதல் 21.7.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலமாகும். இக்காலத்தில் நீங்கள் கவனத்துடன் செயற்பட வேண்டியது அவசியம். செவ்வாய் உங்கள் இராசிக்கு 2. 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவரது பார்வை ச்னியின் மீது பதியும் பொழுது குடும்ப ஒற்றுமை குறையலாம். கொடுக்கல் - வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. வாங்கிய இடத்தை விற்க நேரிடும். பிள்ளைகள் உங்கள் சொற்களுக்கு கட்டுப்பட்டு நடக்க மறுப்பர். வாழ்க்கைத் துணையோடும் பிரச்சினைகள் வந்து அலை மோதும். தாயின் உடல்நலத்தில் தாக்குதல் ஏற்பட்டு அகலும். வளர்ப்பு பிராணிகளிடம் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. வருமானப் பற்றாக்குறையின் காரணமாக கடன் வாங்க நேரிடும். முக்கிய புள்ளிகளை பகைத்துக்கொள்ள வேண்டாம். பணிச்சுமை அதிகரிக்கும். 'படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகள் மறுக்கப்படலாம். 'விருப்ப ஓய்வில் வெளிவரலாமா?' என்று சிந்திப்பீர்கள்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

வெள்ளிக்கிழமை தோறும் மகாலட்சுமி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. இல்லத்தில் அஷ்டலட்சுமியின் படம் வைத்து. லட்சுமி கவச பாராயணங்கள் செய்தால் இலட்சியங்கள் நிறைவேறும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய ஆண்டாக அமையும். அதுமட்டுமல்ல பொருளாதாரத்திலும் பற்றாக்குறை ஏற்படலாம். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்பட விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். மூட்டுவலி. முழங்கால் வலி போன்றவை வந்து தொல்லை தரலாம்.

தாய்வழி ஆதரவு உண்டு. ஒருசில உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பணிபுரியும் பெண்கள் சகப்பணியாளர்களிடம் வேலைகளைப் பற்றியோ. தங்கள் முன்னேற்றத்தைப் பற்றியோ விமர்சனம் செய்யக்கூடாது. பதவி உயர்வில் தடை இருக்கும்.

(தொடரும்)

## முள்ளிவாய்க்...

என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நினைவுச் சின்னத்தை அழித்து பின்னர் அதை புனரமைப்பதற்கான முடிவு பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அதிகாரிகளால் எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் யுத்த நினைவுச் சின்னம் நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் என்று பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்திருந்தார்.

யுத்த நினைவுச்சின்னம் 2018ஆம் ஆண்டில் கட்டப்பட்டதுடன் பல ஆண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்திருந்தார். (ம-3)

## வடக்கில் கொட்டி...

தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 407 குடும்பங்களை சேர்ந்த 1278 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 9 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4 மணிவரை திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 51 குடும்பங்களை சேர்ந்த 158 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 7 தற்காலிக வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களிற்கான அத்தியாவசிய தேவைகள் குறித்து ஆராய்ந்து அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. (ம-3,100)

## வடக்கில் மழை...

என எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார். (ம-3)

## 1047 பேர்...

காரணமாக 358 குடும்பத்தை சேர்ந்த 1047 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்தோடு நேற்று காலையிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டில் பெய்த மழையின் தாக்கத்தின் காரணமாக 57 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக ரீ.என்.சூரியராஜா மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,33)

## விபரீத முடி...

தாயார் தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

வெளிமாவட்டம் ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றும் குறித்த ஆசிரியருக்கு கடந்த 10ஆம் திகதி கொரோனா தொற்று உறுதியானது.

இதனையடுத்து நேற்றைய தினம் தாயார் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரை மாய்த்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்று குறித்து மக்கள் அச்சப்படத் தேவையில்லை என சுட்டிக் காட்டியிருக்கும் மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்,

தொற்றுக்குள்ளான பலர் நோய் குணமடைந்த நிலையில் வீடு திரும்பி சுகதேகியாக வாழ்கின்றனர். அதேபோல் பி.சி.ஆர் பரிசோதனையும் செவி வழி கதைகள் மற்றும் சமூக வலைத்தளங்களில் கூறப்படுவதைபோல் பாரதூரமான ஒரு பரிசோதனை அல்ல. மக்கள் இதனை குறித்து அச்சப்படத் தேவையில்லை.

எனவே மக்கள் உங்களுடையதும், உங்கள் சமூகத்தினதும் நன்மையை கருதி அச்சமில்லாமல் மனச்சோர்வடையாமல் இருக்கவேண்டும்.

அதனை நினைத்து தவறான முடிவுகளை எடுக்கக்கூடாது என தாம் பொது மக்களிடம் தாழ்மையாக கேட்டுக் கொள்வதாக கூறியுள்ளார். (ம-3)

## இரண்டு வாரங்...

முழுமையான முடக்கத்தினை முன்னெடுக்குமாறு அரச அதிபருக்கு பரிந்துரை செய்துள்ளோம்.

அந்த வகையில் ஏ9 வீதியில் நொச்சி மோட்டை பாலம் மற்றும் இரட்டை பெரிய குளம் பகுதியில் அமைந்துள்ள நகர சபையின் வரவேற்பு வளைவு, மன்னார் வீதியில் நெலுக்குளம் பொலிஸ் நிலையம், பூந்தோட்டம் சந்தி, மாமடு சந்தி ஆகிய பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்படும்.

குறித்த பகுதிகளால் வவுனியா நகருக்கு உள்ளே வரும் பொதுமக்களுக்கு தடை விதிக்கப்படும். இன்றிலிருந்து இரண்டு கிழமைகளிற்கு இந்த நடைமுறை நீடிக்கும். அவசர தேவைகள், அத்தியாவசிய தேவைகள், அரச ஊழியர்கள் வந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதரும் பேருந்துகள், முடக்கப் பகுதிக்குள் நிறுத்தாமல் செல்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான பரிந்துரைகளை நாம் அனுப்பியுள்ளோம். ஏனைய நடவடிக்கைகளை அரச அதிபர் முன்னெடுப்பார் என்று தெரிவித்தார்.

மேலும் வவுனியா நகர கோட்டத்திற்குட்பட்ட 42 பாடசாலைகளை இன்றைய தினம் மூடத் தீர்மானித்துள்ளதுடன் செட்டிகுளம் கோட்டம் மற்றும் வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட இரண்டு கோட்ட பாடசாலைகளினதும் கல்விச் செயற்பாடுகளை வருகைதரும் ஆசிரியர்களை கொண்டு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முடக்கப்பட்ட பகுதியில் இருந்து, இயங்கும் பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்கள் கடமைக்கு செல்ல தேவையில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3,299)

## முள்ளி...

புலம்பெயர் தமிழர்களால் கொட்டும் பனிக்கு மத்தியிலும் நேற்றையதினம் இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டு அணையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த தூபியை பல்கலைக்கழக நிர்வாகம் தகர்த்தமைக்கு கண்டனம் தெரிவித்தனர். (ம-3)

## 4 பேர்...

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று இரவு உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு உயிரிழந்த நால்வரும் கொழும்பு-13, மாத்தளை, கனேவல்ல மற்றும் வெல்லம்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 244 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வட...

மாகாணத்தில் ஒன்பது பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்..

அந்தவகையில் மன்னார் மாவட்டத்தில் 5 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 4 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,299)

## விவசாய...

பெறுமதியான விவசாய மருந்துகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாங்குளம் நகரப் பகுதியில் குறித்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

விவசாய மருந்து கடை உடைக்கப்பட்டு கடைக்குள் கறித்தூள் வீசப்பட்டு தடயம் எடுக்க முடியாத அளவிற்கு கடையில் இருந்து மருந்துகள் உடைத்து நிலத்தில் ஊற்றப்பட்டும் பெறுமதியான மருந்துப் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுமுள்ளன.

கொள்ளையிடப்பட்டு சேத மாக்கப்பட்டுள்ள பொருட்களின் பெறுமதி பல இலட்சம் ரூபாய் என உரிமையாளரால் பெறுமதியிடப்பட்டுள்ளதுடன் காப்புறுதி நிறுவனங்கள் கணக்கீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2021.01.12
சீட்டிழுப்பு இலக்கம் - 402
B 36 41 72 76

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2660
X 01 05 26 59

மஹஜன சம்பத
திகதி 2021/01/12
சீட்டிழுப்பு இலக்கம் 4365
P 9 1 8 5 4 4

சுபிரி வாசனா
2021/01/12 1565
06 33 40 43 46

மெகா பவர்
திகதி 12/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0732
J 06 07 15 21 24

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1161
சீட்டிழுப்பு திகதி: 12.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 98,069,525
28 56 67 73 H

சனிதா
சீட்டிழுப்பு இல: 3491
சீட்டிழுப்பு திகதி: 12.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,121,806
18 21 23 72 E

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,384,808/=
திகதி: 12.01.2021
வெற்றி வாரம்: 3042
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 01 02 22 36 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,860,560

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1335 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 12/01/2021 தினம் செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் 62,871,742/=
E 05 31 41 69

ஜய
சீட்டிழுப்பு வாரம் 676
12.01
செவ்வாய்
P 35 42 59 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,988,025
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# தமிழரின் அபிலாசைகள் பேணப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளேன்

## நாடு திரும்பியபின் ஜெய்சங்கர் செவ்வி



(கொழும்பு)

**தமிழ் மக்களின் அபிலாசைகளான சமத்துவம், நீதி, நிம்மதி மற்றும் கௌரவம் ஆகியவை பேணப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

**அத்துடன் இலங்கையின் அரசியலமைப்பில் காணப்படும் 13 ஆவது திருத்தத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நீண்டகால நிலைப்பாட்டில் இந்தியா தொடர்ந்தும் இருக்கிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜெய்சங்கர், இலங்கை அரசாங்கத்துடனான கலந்துரையாடல் குறித்து பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மீதும் மாகாண சபை முறைமை மற்றும் தோற்றத்தின் மீதும் இலங்கையின் புதிய பிரதிபலிப்பு குறித்து இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதன்போது ஜெய்சங்கர் தெரிவிக்கையில், "இலங்கை அரசாங்கத்துடனான எனது சந்திப்புகளில், இலங்கையின் ஐக்கியமும் உறுதியும் பேணப்படுவதில் இந்தியா தொடர்ந்தும் பற்றுறுதியுடன் செயற்படுகிறது என்பதையும் தமிழ் மக்களின் அபிலாசைகளான சமத்துவம், நீதி, நிம்மதி மற்றும் கௌரவம் ஆகியவையும் பேணப்பட வேண்டும் என்றும் கூறி வந்துள்ளேன்.

நல்லிணக்கச் செயற்பாடுகள் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதோடு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு குறித்து இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்திய உறுதிப்பாட்டை காப்பாற்ற வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நல்லிணக்கத்தை அடைவதன் மூலம் தமிழர்கள் உட்பட அனைத்து இனத்தவர்களின் எதிர்பார்ப்புகளையும் உணர்ந்து இலங்கை செயற்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ 2020 செப்டம்பர் 26 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய மெய்நிகர் இருதரப்பு உச்சி மாநாட்டின் போது நம்பிக்கை தெரிவித்தமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்டாய பி.சி.ஆர் சோதனை

## சபாநாயகரால் அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹகீம்ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து இவர்களுடன் நேரடி தொடர்பை பேணிய 31பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 15 பாராளுமன்ற அதிகாரிகளை தனிமைப்படுத்தியுள்ளதுடன், இன்றும் நாளை மறுதினமும் கண்டிப்பாக பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்துகொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானவர்கள் தமக்கான பி.சி.ஆர் பரிசோதனைகளை செய்ததில் அவர்கள் தொற்றாளர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலில் இருக்குமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். அதேபோல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் நேரடியாக தொடர்புபட்ட 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா பற்றுறுதி கொண்ட பங்காளியாகத் தொடர்கிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளில் அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வசிக்கும் குடும்பங்களுக்காக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்தியாவின் பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் இலங்கைத் தீவின் அமோக வரவேற் பைப் பெற்றுள்ளது.

மேலும், வடக்கில் யாழ்ப்பாண கலாசார மையம் மற்றும் ஹற்றன் டிக்கோயாவில் மருத்துவமனை ஆகியவை இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் நிதிக்கடன் திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்திற்கான தொடரூந்து பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமானநிலையம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் இந்திய நிதியைக்கொண்டு நடைபெற்றுவருகின்றன. அத்துடன் மலையகத்திற்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் மேலதிகமாக அறிவிக்கப்பட்டுள்ள 10ஆயிரம் வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் அடுத்த நான்காண்டுகளில் பூர்த்தியாகவுள்ளன.

பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு, ஆம்பியூலன்ஸ் சேவைகள், பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், கல்வியை மேம்படுத்துதல் போன்ற எமது கடந்தகால கருத்திட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் முழு இலங்கையிலும் கொரோனாவிற்குப் பின்னரான பிராந்திய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சமூகத்தையும் மனித வளங்களையும் கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதனைக் கருத்திற்கொண்டு, எங்கள் வளர்ச்சி கூட்டாண்மைக்கான எதிர்கால செயற்திட்டம் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். உள்நாட்டு தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் ஆராய்ந்து எமது உரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாம் கல்வி, திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் எமது அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளோம்" என்று குறிப்பிட்டுள்ளார். (ம-03)

காணி தேவை
யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய், கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இடங்களுக்குள் 10 பரப்பு தொடக்கம் 30 பரப்பு வரையான காணிகள் தேவை.
(தரகர் தேவையில்லை) (5264)
076 221 2037

சிறுநீரகம் தேவை
O,B குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு (5263)
076 239 9874

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், இராசபாதை வீதியில் ராசபாத சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
( தரகர் தேவையில்லை ) (5264)
குரு : 077 805 1655
077 288 0152, 077 505 8561

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-1102)
0768226240 DHL

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1112)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.